தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:
கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, புரட்டாசி 17 (3-10-'59). சனிக்கிழமை | இதழ் 16

கலைந்த கனவு; கவிழ்ந்த உறவு.

★

"சொல்லாமலே செய்வதில் வல்லவர்!" என்றபெயரெடுத்த மனிதர் சௌஎன்லாய். "சொல்லியும் செய்ய முடியாத வாய்ப்பந்தல்காரர்" என்ற பெருமை பெற்றவர் நேரு. இரண்டு மனிதர்களுக்கிடையேயும் எத்தனை வேறுபாடுகள்?

சௌஎன்லாய் அமைதியாய், நிதானமாய் வாதாடி எதிரியை மடக்குவதில் கைதேர்ந்தவர் எனப் பெயர் பெற்றவர். உணர்ச்சி வசப்பட்டு உளறிக் கொட்டிவிட்டு, பின் "கெட்டு விட்டதே, எல்லாம்!" எனப் புலம்புபவர் நேரு. இரண்டு பேரும் இந்தியாவில் சந்தித்த போதும், சீனவில் கண்டு கொண்ட போதும் பேசிக் கொண்ட முறைகளை மறக்க முடியுமா?

சௌஎன்லாய் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் தெளிவாகப் பேசும் வல்லமை உள்ளவர். ஆனல் இந்தி வெறி பிடித்த நேருவை மடக்க, புதுதில்லியில் அவரைக் கண்ட போது செய்ததென்ன தெரியுமா? "நான் சீன மொழியில் தான் பேசுவேன்!" என்று கூறி, ஒரு சீன மொழிபெயர்ப்பாளரை வைத்துக்கொண்டு நேருவுடன் பேசினராம்.

சௌ இந்தியாவிற்கு வந்த போது ஓர் ஏடு இப்படி எழுதிற்று: "வளைந்து கொடுப்பவரும் அடிபட்ட கொள்கையுடையவரும் ஆன நேருவிடம், திபேத்தை விட மேலும் அதிகமாக எவ்வளவு அடையமுடியும் என்று இந்தியாவில் ஆராயவும் கற்கவும் விழைகிறார், இந்தியா வந்துள்ள சௌஎன்லாய்!"

அது உண்மையே! அன்று நேருவின் ஏமாளித்தனத்தைக் கண்டு சென்றவர், இன்று தன் பணியை முடித்துவிட்டார். அதன் பலன்தான சீனவோடு 40 ஆயிரம் சதுரக் கற்கள் நிலப்பரப்பு சேர்க்கப்பட்டது. இதைப்பற்றிய விளக்கங்களை 5-ம் பக்கம் காண்க.

★

தொல்காப்பியச்சுவை!

14. தமிழர் மரபியலின் சிறப்புக்கள்.

சோர்ந்து விழும் உள்ளங்களை நிமிர்ந்து நிற்கச் செய்யும் பேரிலக்கியம் தொல்காப்பியம் என்பது உண்மை. வாழ்ந்துவிட்டு இன்று வீழ்ந்து கெட்டு விழும் நிலையைக் காட்டி விழித்துவிடு என்று வழி கோலும் மரபியல் பல்வகையானும் சிறப்புடையது. சென்ற கட்டுரையில் மரபியலுள் சில மாறுபாடுகளையும், இடைச் செருகல்களையும் பற்றிச் சற்று விளக்கமாகக் கூறினேன். பொதுவாகப் படித்துவரும் நண்பர்கள் விளக்கம் ஆராய்ச்சிக்குத் துணை செய்யலாம்; எங்களுக்குச் சற்றுத் தெளிவுபட எழுதக்கூடாதா? என்று எழுதியுள்ளனர். சென்ற கட்டுரையிலேயே ஆய்வாளர்கள் கருத்துக்குப் பட்டால் பயனுண்டு என்றும் எழுதியிருக்கிறேன். எனவே தொல்காப்பியர் எழுதாதவற்றைப் பிற்காலத்தில் வந்த குறுகிய எண்ணம் கொண்டோர் எழுதிச் சேர்க்கும் இடம் தெரியாமல் சேர்த்துவிட்டமை எண்ணி எண்ணி வருந்துதற்குரியதொன்றாகும்.

இக்கட்டுரையிலும் தொல்காப்பியரது மரபியல் சூத்திரங்களில் சில செய்யுளியல் சூத்திரங்களின் கருத்துக்குப் பொருந்தாது காணப்படுகின்றன என்பதை எழுதலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் "தென்றலை" உணர்வோரில் பலர் தமிழரின் மரபினை மூலமாகக் கொண்டு கட்டுரை அமையலகாதா? என்று வினவினர். விடையாக இக்கிழமை அவர்கட்கு எழுதுகின்றேன். எஞ்சிய என் கருத்தினை அடுத்த கட்டுரையில் தொடுத்து முடிப்பேன்.

மரபு என்றாலே முறை-வழி என்பதும் அதுவும் பன்னாட்கள் பலராலும் பயின்று வந்தவழி என்பதும் கருத்து. தான் எண்ணியதை மட்டும் உண்மை என்று கொண்டு நடந்தால் அது மரபாகாது; பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு 'ஏற்புடையது' என்று ஒழுகுதலே மரபாகும்.

மரபுவழி வாழ்ந்த இனத்தின் முழுச் சிறப்பும் ஒளிக்கீற்றுத தெளிவுபடத் தெரியும வரையில் கூறுகின்றேன். உலகில வாணிகத்தின் ஏணி என்று இன்று கூறப்படும் அமெரிக்க நாடு கொலம்பசால் கண்டுபிடிக்கப்படாத காலத்தில், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு அல்ல - கிருத்து பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே பல நாடடுச் சந்தைகளில் பயின்ற இனம் தமிழினம்! நமக்கு இன்று கிடைக்கும் இலக்கிய இலக்கணங்களுக்கு எல்லாம் முதன்மையானதும் தொன்மையானதும "தொல்காப்பியம்" ஒன்றே ஆகும். தொல்காப்பியர் மரபு நிலைகளை எங்கெங்கு கூற வேண்டுமோ அங்கங்கே, மரபு வழுவாமல்-மறதி வராமல் புகன்றுள்ளார். தலைவன தலைவியை விட்டுப் பிரிவானுனால் ஏன்? எதற்கு? எவ்வளவு நாடகள்? என்பதை மரபியல்வரை வைத்திருந்து கூறுமல், அகத்திணையியலிலேயே கூறும் மாண்பு போற்றத்தக்கது. அங்கே ஆறு வகைப் பிரிவுகளில் வாணிகத்தின் பொருட்டுப் பிரியும் பிரிவையும் கூறுவதுடன், கடல் கடந்து செல்லும் நிலையும் உண்டு என்பதையும் கூறுகிறார். கடலைக் கண்டு மருண்ட இனங்கள் பல உண்டு. ஆனால் விண்ணையும் மண்ணையும் கடலையும் வெற்றிகொண்ட ஒரே முதல் இனம் தமிழினம் என்பதில் உண்மை உண்டு. கடல் கடப்பதுமட்டும் இல்லை-கலஞ் செலுத்துவதுமட்டும் இல்லை-சென்றவிடத்தில் வாணிபமும் செய்தனர் என்றால் தமிழர் வாழ்வியலின் சிறப்புப் புலனாகின்றது. வாணிபமில்லாவிட்டால் பொருள் இல்லை; பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. எனவே உயிர் வாழ்க்கைக்கு உறுதுணையாவது பொருள் என்பதை அறிந்து, அதனைச் சேர்க்கக் கடலும் கடந்த கவினுறு பெருமை தமிழ் மரபாகும். இன்று இழந்து வாடுவது வாழ்வும் வாழ்வுக்கு வழியாகிய வாணிபமும் ஆகும்.

பொருள் மட்டும் சேர்ந்துவிட்டால் அமைதி கிடைக்காது என்பதை

இராம. இராமநாதன் பி.ஏ. (ஆனர்சு)

மேனாடுகள் இன்றுதான் உணருகின்றன. ஆனால் கி. மு. 5 அல்லது 6-ம் நூற்றாண்டிலேயே தமிழ் மக்கள் அமைதியான வாழ்க்கை முறையை உணர்ந்திருந்தனர்.

ஒரு நாடு இன்பச் சூழலில் செல்கினறது என்றால் அந்நாட்டில் பூசல், குழப்பம், படை எடுப்புபோன்ற வ இல்லை என்பதே காரணம். அது தமிழகத்தில் நின்று நிலவிய காலம் ஒன்றுண்டு; அதுவே தமிழர் தம் வரலாற்றில் பொற்காலமும் ஆகும். தலைவனும் தலைவியும் மனமொத்து இல்லற வாழ்விலே இன்பம் கண்ட செய்தி தமிழர் தம் மன அமைதிக்கு வழி கோலியது எனலாம்.

தமிழ் மரபு வழி பார்த்தால் உலகிலேயே பண்பாட்டின் சிறந்த இனம் தமிழினம் என்றே தெளிய முடிகின்றது. பண்பாடு என்பது, வளர்ச்சி பெற்ற மக்கள், வாழ்ந்து கெட்ட மக்களின் வழியில் திரும்பிப் பார்த்துத் திருத்தியமைத்த முறை என்றால் பொருந்தும். தொடக்க காலத்தில் தொடர்ந்த இடர்கள் எண்ணற்றிருக்கலாம்; இடர்களை வென்று ஒரு நிலையை அடைந்த பின்னரே சுடர்விட்டு விளங்கமுடியும். அந்த நிலையைத் தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாடு பெற்றுச் சிறந்திருந்தது என்பதுமட்டும் திண்ணம்.

ஒரு நாட்டின் சிறப்புக்கு உறுதுணை வாணிகம் என்பது முன்னர் கண்ட செய்தி. பிற செய்திகளால் பெறும் சிறப்பினையும் காணுவோம். வாணிகத்தின் ஏணி கொண்டு உயர்ந்த தமிழினம் வாழ்க்கை முறையிலும் வளம் பெற்று விளங்கியது. தமிழர் வாழ்வியல் முறையைத் தொல்காப்பியர் வழிநின்று கண்டால், ஏழு வகையினுள் எழிலுறக் காட்டுகின்றார். மாட மாளிகைகளிலும், ஓலைக்குடிசைகளிலும், மலையடிவாரங்களிலும், பொங்கும் கடலோரங்களிலும் தங்கும் மக்களின் எழிலான வாழ்வியலை ஏழு பகுதிகளில் காட்டுகின்றார். அவரவர்நிலைக்கேற்ப, வாழும் சூழலிற்கேற்ப வாழ்வியல் முறையும் ஒழுக்கமுறையும் பின்னிப் பிணைந்து பெருஞ்சிறப்புப் பெறுகின்றது.

முல்லையிலே வாழ்வு: காடு. கடும் உழைப்புக் காரணமாய் வருத்தம். இந்த நிலை தலைவனைப் பிரிந்த தலைவிக்கும் ஏற்படும்.

குறிஞ்சி வாழ்வு: மலைப்பகுதி. குளிரில் கூடி வாழ்வதில் இன்பம் பெறும் பகுதி. விலங்கும் பறவையும் கூட குளிரில் கூடிப்பெறும் இன்பம் இங்குச் சுவைபடக் கூறப்படுகின்றது.

மருதநில வாழ்வு: வளமான பழனங்கள் கொழிக்கும் பணம் படைத்த மக்கள் உலவும் இடம். பரத்தையர்கள் பலர் உலவும் பகுதி. பெருஞ்செல்வர்கள் வெறும் பொழுது போக்குதற்குப் பரத்தையரை நாடும் இயல்பு இங்கு உண்டு.

நெய்தல் வாழ்வு: அலைக்கரங்களை உயர்த்தியும் தாழ்த்தியும் உண்மை நிலையை உரைக்கும் கடல்-உள்ளம் அலைமோதும் இரங்கலைக் குறிக்கின்றதன்றோ! பிரிந்தவன் பெரும் பொருளீட்டி மீளும்வரை மனத்தில் நீங்கா அலைமோதும் நெய்தல் இரங்கலை இயம்புகின்றது.

பாலைவாழ்வு: சோலைவாழ்விலே சேயிழையாருடன் கூடிக் குலவிய தமிழ்மறவர்கள் வாழ்வியலை நடத்த பொருளீட்ட வழி நடந்து செல்லும் போது இடைப்படும் இடங்களில் பாலையும் உண்டு. தலைவியுடன் கூடி மகிழ்ந்து பொருள் தேடி வரப் புறப்படுகின்ற மறவர்களைச், செடி மறைவிலிருந்து கொடிய அம்பு கொண்டு உயிர் மடித்துப் பொருள் சேர்க்கும் ஊறலைப்போர் வாழும் பகுதி இது. இவர் தம்மையும் எதிர்த்துக் குன்றன்ன பொருளினைக் கொண்டுவரும் கொள்கை வீரர்களையும்-அவர் தம் காற்கண்ணியரின் கண்ணீர் தவழும் கருத்துரைகளையும் காட்டும் பகுதி பாலைதான்.

கைக்கிளை வாழ்வு-தமிழகத்தில் மேற்கண்ட ஐவகையை ஒட்டி அவற்றோடு சேராத வாழ்வு இரண்டினுள் ஒன்று இது. ஒருதலைக் காமம் உடையோர் இவர்கள் உறவு ஒட்டுதல் இல்லை. ஆணும் பெண்ணும் அகத்தால் ஒன்றிக் கற்பால் ஒன்றுபடுதலே களவு வழிப்பட்ட கற்பாகும். இஃது அம்முறையின்றி ஒன்று உள்ளங்கள் ஒருப்பட முயல்வது வெற்றியும் இல்லா வீணர்தம் முயற்சி என்பது தொல்காப்பியம்.

பெருந்திணை வாழ்வு: பொருந்தாத மணம். பெருந்தலைவர் என்றாலும் அருந்தமிழர் முறைகளை அழிக்கும் நிலை கண்டால் அது தொல்காப்பிய வழியாலும் பொருந்தாது என்று கூறுதற்குத் துணை செய்த திணை இதுதான், ஒத்த பருவம் இன்றி உறவாடுதல் ஒவ்வாது என்பதை உரைக்கும் பகுதி இது.

வாழ்வியலை ஏழு பிரிவுகளாக்கி, உலகில் பல பகுதிகளில் வாழ்வோரையெலாம் அதுனுள்ளே அடக்கிப், பண்பையும் இணைத்து ஒழுக்கத்தையும் உரைத்து நிற்கும் ஐந்திணை வாழ்க்கை முறை, தமிழர் நேற்று-இன்று நாளையும் பின்பற்றக் கூடிய உயர் வழியாகும்.

மரபியலின் சிறப்புக்கள் என்று வைத்துக்கொண்டு பொதுவாகத் தமிழர் தம் சென்ற கால மரபினைச் சற்று விளக்கமாகக் கூறியுள்ளேன். பொதுவாக, பிற இயல்களில் காணப்பெறும் கருத்துக்களும் ஊடாடும். அடுத்த கிழமையில் மரபியலில் பொருந்தாத சிலவற்றைக் கூறி இவ்வியலை முடித்துச் செய்யுளியலுக்குச் செல்வோம்.

★

அடுத்த கிழமை—

தொல்காப்பியத்தில் :
"மரபியலுள் பொருந்துமா?"

வாழ்க! வாழ்க!

கோவை நகராட்சி உறுப்பினரும், அண்ணா டிரான்ஸ் போர்ட் உரிமையாளருமான திரு. **பி. எஸ். சானகிராம்** அவர்கள், அவ்வூர் நகராட்சி தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியையான திருமதி **டி. சம்பூர்ணம்** அவர்களை 28-9-'59 அன்று கோவையில் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்கள். மணவிழாவுக்கு **அண்ணா** அவர்கள் தலைமை வகித்து, நடத்தி வைத்தார்கள். தோழர்கள் பலர் வாழ்த்து உரைத்தனர்.

மணமக்களுக்கு, "தென்றல்"ின் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 6 | 3—10—'59 | இதழ் 16

சொல்லின் செல்வருக்குத் தடையா?
இதைச்
செய்தது அங்குள்ள கூலிப்படையா?

மகர தோரணங்கள் கட்டி, துந்துபி முழங்கி, நாற்படையையும் அழகுற நிறுத்தி, "வருக! வருக!" எனத் தமிழரசர்க்கு வாழ்த்து முழங்கிய காட்சியை மலாயாமண்ணும் அறியும்; தமிழக வரலாறும் சொல்லும். கலம் செலுத்தி, கடல் கடந்து, காலெடுத்து வைத்த நிலத்தைத் தன் காலடியில் நாம் பணிய வைத்ததைத் தமிழ் மண்ணும் அறியும்; மலாயாவின் வரலாறும் சொல்லும். நாகரிகமற்றுத் திரிந்த மக்களிடை. தாம் குடியேறி அவர்களுக்கு நாகரிகத்தைக் கற்பித்தனர் தமிழர்; அத்தோடு அரும் பாடுபட்டுழைத்துக் காட்டைத் திருத்தி நல்ல ரப்பர் தோட்டம் கண்டனர். பொருள் வளம் பெருக்கினர். இதை மலைநாட்டில் வாழும் எந்தக் குடிமகனும் மறுக்கமுடியாது.

தான்பட்ட பாட்டுக்கு-விட்ட கண்ணீருக்கு-பெற்ற துன்பத்திற்குச் சரியான பலனைத் தமிழன் காணமுடியவில்லை. எவரும் மறுக்க முடியாத உண்மை.

"வருக! வருக!" என வரவேற்கப்பட்ட இனத்தின் பரம்பரையில் வந்தவன்தான், பின்னொரு நாள் தொட்டு காடு மேடுகளில் தள்ளப்பட்டான். ரப்பர் தோட்டக் கூலி என முத்திரை குத்தப்பட்டான். உள்ளத்தைக் கிழிக்கும் இந்த நிலையின் கொடுமைகள் நமக்குத் தெரியும். என்றோ நம்மை விட்டுச் சென்ற நம்மவர், அங்கே தனிக் காட்டில் படும் துன்பத்தை நினைத்தாலும் வருத்தம் வரத்தான் செய்யும். இப்படிப்பட்ட மக்கள் நம்மைக் காண விழைவதும், நாம் அவர்களைக் காண முனைவதும் தவிர்க்கமுடியாத நிகழ்ச்சிகள்.

இந்த வகையில்தான் நம் சொல்லின்செல்வர் சம்பத் அவர்கள், மலாயாவுக்கும் சிங்கப்பூருக்கும் சென்று நம் இனத்தவர்களைக் காணத் துடித்தார். தாயகம் விட்டுச சென்றோரைக் காணவும், அவர்களுடன் கலந்துரையாடவும்தான் அவர் விழைந்தார். அவர் இச்சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள நினைத்தது எந்த வகை அரசியல் நோக்கத்திற்காகவுமன்று. இது ஒரு நல்லெண்ணச் சுற்றுப்பயணமே. இதை அவ்விரு அரசினரும் நனகறிவார்கள். இதை, ஏற்கனவே அங்குளள தி. மு. கழகத்தினரும் அறிவித்திருக்கின்றனர்தெளிவாக. இருந்தும் அவர் பயணத்தை, அரசியலுடன் தொடர்புபடுத்தியது தவறு.

மேலும், அங்குள்ள தி. மு. கழகம் தாய்நாட்டிலுள்ள தி. மு. கழகத்திற்கு எவ்வகையிலும் கிளையன்று. அது இதற்கு ஓர் ஆதரவு காட்டும் நிறுவனமே. எனவே தாய்நாட்டுக் கழகத்தின் செயல்களில், திட்டங்களில் சிங்கை தி. மு. கழகத்தார்க்குப் பங்கில்லை. திராவிட விடுதலைப் போருக்கான மறவர்கள் எண்ணற்றோர் ஏற்கனவே இங்கிருக்கின்றனர். தலை விலைகொடுத்தும் தாயகத்தினைக் காப்பதற்கான எஃகு நெஞ்சத்தினர் எண்ணற்றோர் இங்கிருக்கும்போது, வெளிநாடுகளில் தொண்டர்களைத் திரட்டி வந்துதான் படையமைக்க வேண்டுமென்ற நிலை இல்லை. எப்படித் தன் நாட்டு அரசியலில் பிறநாட்டான் நுழைவதை தி. மு. க. வெறுக்கிறதோ, அதுபோலவே பிறநாட்டரசியலில் தான் தலையிடுவதையும் வெறுக்கிறது; தவிர்க்கிறது!

"சம்பத் அவர்கள் ஒரு சுதந்தரத் தமிழ்நாடு அமைக்கும் தமது நோக்கத்திற்கு ஆதரவு தேடவே இங்கு வருகிறார். அயல்நாட்டுப் பிரச்னைகளுக்கு ஆதரவாக இங்குள்ள மக்களைத் தூண்டிவிட வரும் எந்த அரசியல் வாதியையும் அனுமதிப்பதற்கில்லை." என்பதாக அறிக்கை விடுத்திருக்கும் சிங்கை அமைச்சரவை, இதனை நன்குணரக் கடமைப்பட்டுள்ளது.

அடுத்து, சம்பத் அவர்களுக்கு மலைநாட்டுக் கூட்டாட்சி "விசா" வழங்க மறுத்தது, சிங்கப்பூர் தடை விதித்ததைப் பின்பற்றித்தான் என்கிறார், கனம் துங்கு அப்துர் ரகுமான் அவர்கள். ஆனால் சிங்கை உள்நாட்டு அமைச்சர் துறையோ, மலைநாட்டு அரசு சம்பத் அவர்களுக்கு அனுமதி தரப் போவதில்லை எனற செய்தியைத் தனக்குத் தெரிவித்த பின்னர்தான் தானும் தடை விதித்ததாகச் சொல்கிறது. இப்படி இரு சாரரும் ஒருவரையொருவர் காட்டித் தப்பித்துக்கொள்ள முனைகின்றனர். அதனால் இரு சாரரும் தம் செயல்களின் விளைவை உணர்ந்தேயிருககின்றனர் என்பது கண்கூடு. ஏன் இருவரும் இப்படி மறைத்து மறைத்துப பேசவேண்டும்? என்ன அவசியம் ஏற்பட்டது இப்படிப் பேச? 'சுதந்தரத் தமிழ்நாடு கொள்கை இந்திய மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்று; அதைச் சிங்கை மக்கள் தீர்மானிப்பதற்கில்லை" என்று வேறு சிங்கை உள்நாட்டு அமைச் கூறுவது வேடிக்கையானது நாம் கேட்பது திராவிட நாடு. அதை யா கூடி யாரிடம் மோதிப் பெறவேண்டுமென்பதை நாமறிவோம்; நன்கறிவோ ஆனாலும் அங்குமொரு காமராசர் இருக்கிறார் என்ற செய்தியை இன்றுதா அறிகிறோம். நமது பெயரைக் குறிப்பிடுகையில் அங்குள்ள சில அரசிய வாதிகளும் ஏடுகளும் "Revolutionary Dravidian (Black Shirt) Movement" என்றும "இந்தத் திராவிடக் கருப்புச்சட்டை இயக்கம் என்ப இந்தியாவிலுள்ள ஒரு வகுப்புவாத இயக்கம்!" என்றும் கூறுகின்றன எழுதுகின்றனர். நம் இயக்கத்தை வகுப்புவாத இயக்கம் என்பதிலிருந்தே இவர்களின் தெளிவு நமக்குப் புலப்படுகிறது. இப்படி நம்மைப் பற்றி சரியாக அறியாத நிலையிலேயே நம்மீது குற்றம் சாட்டுகின்றனர் என்றா இதன் அடிப்படையை நாம் அறிவோம்.

மலாயாக் கூட்டரசின் தலைமை அமைச்சர் மற்றொரு தவறும் செய் திருகிறார். "விசா" வழங்குவதிலும் "பாஸ்போர்ட்" தருவதிலும் அந்நாட்டி Immigration Department செய்யவேண்டிய நடவடிக்கைகளில் தலையிட்டிருக்கிறார். இமிகிரேசன் இலாகாவின் தலைமை அலுவலகத்தார், சம்பத் அவர்களின் வருகை பற்றிய மனு ஏதும் தமக்குக் கிடைக்கவில்லை என்கிறார்கள். வந்தால் அது கவனிக்கப்படும் என்றும் கூறுகிறார்கள். உரிய முறையில் இமிகிரேசன் இலாகாவிற்கு அவர் மனுவை அனுப்பாமல் வெளி விவகாரத்துறை முடிவெடுத்து விட்டதாகச் சொல்லப்படுவது, நீதிக்கு முரணானது. இப்படி, அலுவலர்களின் பணிகளில் துங்குவின் ஆட்கள் தலையிட்டால், அங்கே, நீதி நிலைக்கும் என்று எப்படி நம்புவது? அவர்க எப்படி நடுநிலையோடும், கட்சிப் பாகுபாடற்றும் பணியாற்ற முடியும் தலைமை அமைச்சர் சரியான வழிகளில்தான் செல்கிறார் என்று மக்க எப்படி நம்பமுடியும்? எல்லாவற்றுக்கும் மேலாக அமைச்சரவை திறமையுடனும், தமிழர் என்ற வெறுப்பற்ற முறையிலும், செயல்படுவதாக தோட்டத் தொழிலாளர்கள் மனதில் நன்னம்பிக்கை எழுமா?-இவ்வினாக்களை நாம் மட்டும் தொடுக்கவில்லை; அங்குள்ள அரசியல் வாதிகள் பலரு கிளப்பியிருக்கின்றனர்.

பொதுவுடைமையரைத்தான் கொலைக்காரர்களாய் எண்ணிப் பயந்து நடுங்கி வந்தது, மலாயாக் கூட்டாட்சி. இப்போது அவர்களைவிடக் கொடியவர்களாய் தி. மு. கழகத்தினரைக் கருதுகிறதுபோலும். பெரியார் ஈ. வே. ரா அவர்களை அனுமதித்ததனால் என்ன கேடடைந்தது அந்த ஆட்சி? முழுக்க முழுக்க வகுப்புவாதியான குன்றக்குடி அடிகளாரை நுழையவிட்டது எதனால்? மேலாக, பல பொதுவுடைமை வாதிகள் பிறநாடுகளிலிருந்து வந்தபோது வாய்மூடிக் கிடந்ததேன்? பொதுவுடைமையரால் மலாயா அடைந்த இன்னல்களை மறக்கவில்லையே. நாம் அவற்றை நன்கு நினைவில் வைத்திருப்பதோடு, அந்தக் கொடுமைகளைக் கண்டிக்கவும் செய்தோம்.

இவற்றை எல்லாம் உணர்ந்தவர்தான் துங்கு அவர்கள். ஆனாலு ஏதோ ஒன்றால் அவர் தூண்டப்பட்டிருக்கிறார் என்பது உறுதி. மலாயாவுக்கு சம்பத் அவர்கள் வருவதால், திராவிடச் சிந்தனை பெருகும். பெருகினால் இந்தியர் என்ற பெயர் கூறிப் பல மோசடிகளைச் செய்து வரும் மலாய இந்தியர் காங்கிரசு என்ற அமைப்பு உடைபடும். இதனை உணர்ந்த மலாய இந்தியர் காங்கிரசார், மறைமுகமாக சம்பத் அவர்களின் வருகையை தடை செய்ய முயன்றிருக்கின்றனர். அவர்கள் அங்குள்ள இந்தியத் தூ வரையும் அணுகியிருக்கலாம். இந்தியத் தூதுவரும் தடையெழுப்ப வேண்டி முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாம்.

"இந்திய அரசியல் கட்சிகளுள் ஒன்றாகிய தி. மு. க வின் தலைவர்களி ஒருவர் (திரு. ஈ. வி. கே. சம்பத்) இந்நாட்டிற்கு வரவிருப்பதைத் தடை செய்வதில் மலாயா இந்தியர் காங்கிரசு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது கம்யூனிஸ்ட் நாடுகளில் இருந்துகூட மலாயாவைக் கண்டறியப் பிரதிநி கள் வந்தபோது இந்தியத் தலைவர் ஒருவர், அதுவும் பொறுப்புமிக்க இந்திய பாராளுமன்ற உறுப்பினர் வருவதைத் தடை செய்ய ம. இ கா. விரும்பு தேன்? இங்கு வரும் அத்தகைய தலைவர்கள் ம இ. கா.வின் வண்டவாள களை அறிந்துகொண்டுவிடுவார்கள் என்ற பயம்தான் இதற்குக் காரண இந்த அச்சத்தால்தான் ம. இ. கா. திரு. சம்பத் மலாயா வராமல் தடுக்க தடை விதிக்க வேண்டுமென்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது. இப்படிப்பட்ட செயல்களால் ம. இ. கா. தன் வண்டவாளத்தை மூடி மறைத்து கொள்ளமுடியாது"—இப்படி, கடந்த 29-6-59 அன்றே அங்குள்ள மக்க முற்போக்குக் கட்சித்தலைவருள் ஒருவரான திரு. டி. ஆர். சீனிவாசக அவர்கள் பேசியுள்ளார்கள்.

ம. இ. காங்கிரசார் முயற்சிகள்பற்றி, "தமிழ்நேசன்" எனும் சிங்கை ஏடு கண்டித்தெழுதிய கட்டுரையை ஏற்கனவே, "தென்றல்" 22-8-59-நாளிட்ட இதழில் எடுத்து வெளியிட்டுள்ளோம். மலாயா அரசினர் அதை ஒரு முறையேனும் படித்திருந்தால் இத்தவறைச் செய்திருக்கமாட்டார்கள்.

இனி என்ன? அதுதான் சிங்கைத் தமிழர்களும், மலாயத் தமிழர்களும் முடிவு செய்ய வேண்டிய ஒன்று.

ஆனால்...சம்பத் அவர்கள் வானூர்தியிலிருந்து இறங்கியதும், வானளாவ முழங்கி வரவேற்புத் தரத் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனரே எண்ணற்ற தமிழர்கள்...அவர்கள் உளம் கலங்குவதைக் காண்கிறோம். பொதுக்கூட்டங்களின் மூலமும் சிறப்புரைகளின் வழியும், அவரது சொல்லின்பத்தை கொள்கை வளத்தை, செவிமடுக்கத் துடித்து ஏமாந்திருக்கின்றனரே பல்லாயிரம் தமிழர்கள்-அவர்கள் இதயப்புண்ணைத் துங்குவின் எந்த மருந்து ஆற்றுது; ஆற்றுது! சம்பத் அவர்களைத் தழுவத் துடித்துக்கொண்டிருந்த கைகளிலே தடை விலங்குகளைப் பூட்டிய கொடுங் கைகள் வரலாற்றுக்கு வணங்கித்தான் தீர வேண்டும்; வணங்கித்தான் தீர வேண்டும்.

கனகமணிப் பெண்ணழகி என்பான் கவிஞன். ஒப்பனையில்லாமலே மின்னும் தாரகை என்பான் கலைஞன். குயிலைப் பழிக்கும் தீங்குரல் என்பான் பாடகன். இயற்கை வடித்தெடுத்த புதுப் பதுமை என்பான் சிற்பி. காலம் தீட்டிய உயிரோவியம் என்பான் ஓவியன். இத்தனையையும் சொல்லவில்லை அவன். ''என் காதலி!'' என்பதைமட்டுமே சொன்னான்!

அழகுக் கதிர்கள் ஆயிரம் அவள் முகத்தில் ஒளி சிந்தினாலும், அவையெல்லாம் எம்மூலைக்கு? அவள் தன் காதலி என்ற ஒரு சொல்தானே அவனை எங்கெங்கும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும்? இந்த உண்மையான பெருமைக்கு மொத்தச் சொந்தக்காரனாய் இருந்தான் அவன். அவளும், தன் காதலன் அவன் என்ற ஒரே சொல்லில் அளவிலாப் பெருமகிழ்வுகொண்டாள்.

காணக் கிடைக்காத ஒன்று, காதல்? கற்பனையைப்போல் உண்மையிலும் அது நல்லின்பம் தருவதா? உண்மைக்கும் கற்பனைக்கும் வெகு தொலைவா?-இந்தச் சிக்கல்களை எல்லாம் சிந்திப்பதில்லை, காளையர் குழாமும் கன்னியர் படையும். கல்லூரியில் படிக்கும்போதே அவனை நேசித்தோம்; இவளோடு பாடினேம் என்று ஒரு முத்திரை குத்திக்கொள்ள வேண்டும். அந்தக் ''காதல்'' நிறைவேறினாலும் அழிந்து போனாலும், நினைவு வந்தபோதெல்லாம் இப்படிச் சொல்லிக்கொள்ளலாம் அல்லவா? - இந்தமாதிரிச் சிந்தனைகள்தான் ''எப்படியும் காதலிக்க வேண்டும்!'' என்ற வெறியை உருவாக்கி வளர்த்துவிடுகிறது.

அவளும் அவனும் அப்படித்தான் காதல் செய்தனரா? மனதைப் படம் பிடிக்கும் ''எக்ஸ்-ரே'' எவனிடமும் இல்லை. ஆனாலும் அவர்கள் முகத்தில் தெறித்த கருத்துக்களைப் படிக்க முயன்றேன்; ஓரளவு வெற்றியும் கிட்டியது. இருவரும் மனம் ஒப்பித்தான் காதல் செய்திருக்கின்றனர். அது நாளொரு பூங்காவும் பொழுதொரு கொட்டகையுமாக வளரத்தான் செய்திருக்கிறது. இருவரும் ஒருவரை ஒருவர் நெருங்கி நின்று சுவைத்தனர்.

காதலுக்குக் கண்ணில்லாதது போலவே, காலத்துக்கும் காலத்தை ஓட்டிவரும் தேர்வுகளுக்கும் கண்ணில்லாது போயிற்று. குருட்டுக்காலம் தறி கெட்டோடியது. தேர்வு மண்டபத்துக்குள் அவர்களைத் தள்ளியது; தேறினால்தானே திருமணம். விழிசொல்லித்தந்த பாடத்தையும், நூல் சொல்லித் தந்த பாடத்தையும் எப்படியெப்படியோ குழப்பி எழுதிவிட்டு வெளியேறினர்.

இன்றுமுதல் கல்லூரிக்கு விடுமுறை. என்ன செய்வது? வழக்கம் போல் இருவரும் மரீனாவில் சந்திந்துக்கொண்டனர். வீடற்ற அகதிகள் போல அன்று இரவு 9 மணிவரை கடற்கரையிலேயே கிடந்தனர்.

உழுகின்ற உழவனுக்கு எதிர்காலத்து அறுவடையைப் பற்றித்தானே, கவலைகள் எல்லாம் இருக்கும்!

விதைக்கின்ற உழத்திக்கும் அறுவடைதானே குறியாய் அமையும்!

காதலித்த அவர்களுக்கும் திருமணம்தான் குறியாக இருந்தது. ''என்றைக்குத் திருமணம் செய்துகொள்வது? எப்படிச் செய்துகொள்வது?'' என்ற வினாக்களை அவள் தொடுத்தாள்.

''உயிருக்குயிரானவளே! வாழ்க்கைப் பயிருக்கு உயிரான - பாழும் வெய்யிலில் கிடைத்த தயிரான- திருமணம் நடக்கும் நாளையா கேட்கிறாய்? கண்ணே! வாணிப் பெண்ணே! ஆணிப்பொன்னே!''

''அய்யாசுவாமி..சினிமாவில்கற்றது ஒரு கோடி; செகத்தில் இன்னும் கற்கவேண்டியதோ கோடானு கோடி! வாழ்க்கைக்கு வாருங்கள்... பிராணபத்தே...! என்றாள் அவள்... இருவரும் சிரித்துவிட்டனர்.

''கூடிய விரைவில் என்தாய் தந்தையரைவிட்டு உன்னைப்பெண் கேட்கச் செய்கிறேன். அது முடிந்ததும் வாணி எம். ஏக்கும் எனக்கும் திருமணம்...''

''விரைவில் ஏற்பாடு செய்வீர்களா?''

''உயிருக்குயிராய் உன்னை விரும்புகிறேன். காலமென்னும் குதிரை எட்டி எட்டிப் போடுகிறது தன் அடிகளை. அதன் வேகத்திற்கு ஈடுகட்ட, நமது ஆசைக்கு ஒரு வெற்றி ஈட்ட, விரைவில் திருமணம் நடந்தே தீரும். இது உண்மை; உறுதி''

அவள் தேன் மழையில் நனைந்தாள்.

அவன் வானூர்தியில் இட்டுச் சென்றான்.

அவளும் அவனும் கனவுகளிலே மிதந்தனர்.

நான் இப்படி இருண்ட வேளைகளில் மரீனாவின் கரைகளில் நடப்பதில்லை. அப்போது தானே இந்தக் காதலர்கள் உறுதிமொழி சிந்துவதும், நெருங்கிப் பிணைந்து இளஞ்சூடேற்றிக் கொள்வதும் நடக்கின்றன. அதைத் தடுக்கலாமா நாம்; அதனால்தான் அப்படிச் செல்வதில்லை. என்னைப் போன்று எல்லாரும் இருக்கின்றனர்? காதலர்கள் பேசிக்கொள்ளும் மறைவான சேதிகளை அறிந்துகொள்வதற்கென்றே எத்தனை பேர் நடக்கின்றனர்! அவர்களைப்போலவே அவனும் ஒருவன் என்றுதான் எண்ணிக்கொண்டனர் அவ்விருவரும். அவன் இவர்களைக் கவனித்ததும் சற்று முறைத்துப் பார்த்துவிட்டுப் போனான். கவிந்து கிடக்கும் இருளையும் ஊடுருவி அவன் கண்கள் எத்துணை ஆற்றலுடன் பார்க்கின்றன. அவள் தலையைக் கவிழ்ந்துகொண்டாள். ''தனக்கென்று ஒன்றைத் தேடிக்கொள்ள வழியற்றவன், பிறன் தேடிக்கொண்டதை ஏன் இத்துணை முறைப்பு முறைக்கிறான்?'' என்ற சிந்தனை அவனுக்கு. அவன் போய்விட்டான்.

இருவரும் எழுந்தனர். தெரு நோக்கி நடந்தனர். அதற்குள் அவளுக்குக் கண்ணீரே பொங்கி விட்டது. சற்று நின்று அவளைத் தேற்றிக் கண்ணீர் துடைத்து, அழைத்துச் சென்றான்.

★

தியாகுவின் தாய் தந்தையார் வந்துவிடுவர் என்று அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக, மடல் ஒன்று வந்தது. அறைக்குள் ஒளிந்துகொண்டு மடலைப் படித்தாள். நினைத்ததெல்லாம் மடலில் இருக்கும் என்றுதான் அவள் எண்ணினாள். ஆனால்...

''தங்கையே!

வேறென்ன முறை சொல்லி அழைப்பது சக்களத்தியாய் வர முனைபவளை? ஆனால்...உனது இந்த முயற்சி வெற்றி பெறுதவரை நான் மூலையில் விழப் போவதில்லை. தஞ்சைக் காளை தியாகு உனை மணந்துகொள்ளப் போவதாக அறிந்தேன். ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் நடப்பதில் என்ன தப்பென்பாய். ஆணின் மனம் முதலிலேயே வேறிடத்தில் பாயாதிருந்தால் கவலை இல்லை. உன்னோடு மரீனக் கரையில் விளையாடுவதற்குமுன்பே, அவர் என்னோடு விளையாடிவிட்டார் காவிரிக்கரையில். அவரின் மடியிலே கிடந்தேன், அன்று; மூன்று மாதக் குழந்தை கிடக்கிறது என் மடியிலே, இன்று. பூத்துக் காய்த்துப் பிள்ளைக் கனியாகப் போகிறது என் காதல். ஆனால் இன்னும் என்னையே திருமணம் செய்துகொள்ளாத அவர் உன்னை வேறு மணக்கப் போகிறாராமே! திருமணம் ஒரு வேடிக்கையா? வாழ்க்கை ஒரு விளையாட்டா? பதிலைச் செயலில் காட்டு.

உன் உதவி நாடும்
தாரா.

மடலைப் படித்த அவள்...

அடுத்த அஞ்சலில், மற்றொரு மடல்...அதைப் படிக்கவும் வழியற்று விழி மூடிக்கிடந்தாள்.

★

''பிள்ளைக்கு மயக்கமாமே...?''

''அப்பா.....உடம்பு நெருப்பாச் சுடுதே!''

அவள் திண்டாடிக் கிடந்தாள். சலனமற்ற கனவிலே, அவள் கட்டுண்டு கிடந்தாள். உலகம் மாயையா? ஊமையா? ஆய்ந்து கொண்டிருந்தாள் முடிவை...

★

காலத்தின் கதி மாறத்தான் செய்கிறது. உடல்நலம் பெற்றது அவளுக்கு. மாமனையே மணக்கச் சொல்லினர்பெற்றோர். ''கிடைத்ததே போதும்; கிட்டியதே நன்று!'' என்ற கொள்கையைப் பழுதற உணர்ந்து கொண்ட அவள், தன் தாய் மாமனையே மணக்க ஒப்பினாள்.

அவன் தன்னைக் காதலித்துக் கைவிட்டாலும், அவள் வாழ்வு அழியவில்லை என்பதைக் காட்ட கருதியோ, ஏனோ, தன் திருமண அழைப்பை அவனுக்கும் அனுப்பிவைத்தாள்.

இங்கே மணம் நடந்தது. அங்கே ஒரு மனம் உடைந்தது.

''கைவிட்டவ''னைப் பழிக்குப்பழி வாங்க, அவள் வேறொருவனைக் கைபிடித்து விட்டாள்....

அன்று அவளுக்கு நல்லிரவான முதலிரவு. எல்லாவற்றையும் மறந்து, கைபிடித்தவனுடன் புத்தின்பம் காண முனைந்தாள். அவன் அசையாத சிலையாய் இருந்தான். திகைத்து நின்றாள், அவள். திடீரென அவன் கண்கள் அருவியாயின.

''ஏன் அழுகிறீர்கள் மாமா?''

''எவனும் செய்யத் துணியாததைச் செய்துவிட்டேன். தாரா என் கற்பனையில் உதித்தவள். என்பேனாவால் உருவம்பெற்ற கற்பனைப் படைப்பு... எனக்கே உரிய ஒருத்தியை அடுத்தவன் அடைவதைப் பொறுக்காததால் வளர்ந்த வினை இது. உன் திருமண அழைப்புக் கண்டு, மதி புரண்டலறும் நிலைக்கு அவனைக் கொண்டுவந்ததற்கு, மன்னித்துவிடு...?''

மாமாவுக்கா காதல் தெரிந்தது? யாருக்கும் தெரியாமல் மறைவில் தானே நடந்தன அந்தக் காட்சிகள். அவள் திகைத்தாள்... அழவும் முடியாது திணறினாள்...விழுந்தாள்...

''அப்பாடியனால்...அன்றிரவு கடற்கரையில்...''

அவள் வாய் அந்தக் கேள்வியை முடிக்கவேயில்லை...என்றைக்குமே..

-பரசுராமன்

வருந்துகிறோம்.

கவிஞர் திரு. தமிழண்ணல் அவர்களின் தாயார் திருமதி **கலியாணி ஆச்சி** 2-9-'59 அன்று காலமானார்கள் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். நண்பர்க்கு நம் அனுதாபம்.

(ஆ-ர்.)

தென்றல்

காட்டை அடைக்க மறந்த நேரு

கலங்குகிறார்; மயங்குகிறார்.

மாட்டை மேயவிட்ட சௌஎன்லாய்

ஆடுகிறார்; பாடுகிறார்.

கூடலரசன்

இந்தியத் துணைக்கண்டத்தை ஒழுங்கான வகையில் ஆட்சி செய்வதற்கு இந்திய தேசீயக் காங்கிரசார் தகுதியற்றவர்கள் என்பதைத்தான் நாடெங்கும் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன. ஆட்சி முறைகளின் அலங்கோலத்தினால்தான் இமயம்முதல் தென் கடலோரம் வரையிலும் கொந்தளிப்புகள்; குமுறல்கள்; கிளர்ச்சிகள்; அடக்குமுறைகள். இவை இடைவேளையில்லாமல் எங்கேனும் ஒரு பகுதியில் எழுந்து ஓய்ந்த வண்ணம் இருக்கின்றன. பாரபுகழும் பண்டிதரின் பாரத சர்க்காரும், பஞ்சசீலக் கொள்கைகளும் பலமுறை பங்கப்பட்டுவிட்டன என்றாலும் உலகத்தின் முன்னே தங்களை உயர்த்திக் காட்டத் துடிக்கிறார்கள்! உள்நாட்டிலேதான் இன்றளவும் அமைதியைக் காண முடியவில்லை. எல்லையோரங்களிலுள்ள பகுதிகள் இனிமேலாவது அமைதியைக் காண முடியுமா என்று சந்தேகிக்கும் அளவில் சங்கடங்களும் சர்ச்சைகளும், சரமாரியான கேள்விக்கணைகளும் எழுந்து வளர்ந்துவிட்டன. இனிமை கலந்த 'இந்தி சீனி பாய் பாய்' என்ற இசை, வேறு இராகத்திற்குப் போய்விட்டது! இந்தியாவும் சீனாவும் இரு எதிர்முகாம்களாகிவிட்டன. இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் காகித இணைப்புகள் நிறைவேற்றப் போவதில்லை! கட்டிப்பிடித்துக் கழுத்திலும் மார்பிலும் முத்தம் சொரிந்து கொண்ட சௌஎன்லாயும் சவகர்லால் நேருவும், புதுடில்லியிலும் பீகிங்கிலுமிருந்து காகிதக்கணைகளை ஏவிக் களைத்துப் போய்விட்டார்கள். இவர்களின் அழகான இணைப்பை நேரிலே கண்டு, முத்தங்களின் சத்தத்திலே சித்தம் குளிர்ந்துபோன நம்நாட்டு இண்டெஸ்கித் தோழர்கள், எதிர்பாராத காதல் முறிவுக்குக் காரணங்களைத் தேடிக் கண்டுபிடிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்! நவசீனாவும் நவஇந்தியாவும் நம்பிக்கை நட்சத்திரங்களாக இருந்த நாட்களெலாம் நகர்ந்துவிட்டன. சௌவும் நேருவும் ஒருவருக்கொருவர் "நீதான் நாசவேலை செய்துவிட்டாய்" எனக் குற்றம் சாட்டிக்கொள்ளும் நிலையிலே உள்ளனர். இந்தி சீனி பாய்பாய்த் தோழர்கள் இருக்கியிலே சிக்கியிருக்கிறார்கள். இன்னொரு வகையிலே குறிப்பிட வேண்டுமானால் 'உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனப் பெண்போல' தங்கள் தாயகமான சீனாவும், பிழைக்க வந்துள்ள நாடான இந்தியாவும் மோதிக்கொள்ளும் காட்சியைக் காணச் சகிக்காமல், தலையிலே துணிபோட்டுச் சந்து பொந்துகளிலே ஒதுங்கிக்கொள்ளும் நிலையிலே இருக்கிறார்கள். இதனையே இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், "ஊரறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு" என்பது போல இந்தியக் "காம்ரேடு"கள் என்றாலே சீனாவுக்குக் கையாட்கள், சௌஎன்லாயின் பக்கம்தான் சார்ந்தும் சாய்ந்தும் நிற்பார்கள் என்பதையும் நாம் உணரலாம். தலாய்லாமா தாயகம் விட்டுத் தப்பி பிழைத்து தஞ்சப் புகுந்துவிட்ட நாட்களிலிருந்து நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள்தான் கம்யூனிஸ்ட்களைக் காட்டிக்கொடுத்துள்ளன.

இந்தியத் துணைக் கண்டத்தின் வடக்கு கிழக்கு எல்லைகளில், கழிந்து போன மாதங்களில் சோகச் செய்திகள் பல நடைபெற்றுவிட்டன. சுதந்திரத் தாயகமாகப் பணியாற்றவும் பெருமை பெறவும் துடித்த திபெத்திய மக்கள் தீப்பந்தங்களுக்கு இரையானார்கள். செஞ்சீனத் துருப்புகளின் காலடியில் பட்டு நசுங்கிப் போனவர்களின் எண்ணிக்கை எவருக்கும் தெரியவில்லை பல்லாயிரக்கணக்கான திபேத்திய மக்கள் இந்தியாவுக்கு ஓடி வந்திருப்பது ஒன்றே, செஞ்சீனர்களின் கருணை உள்ளத்துக்குச் சான்றாக உள்ளன. அங்கேரியிலிருந்து ஓடி அமெரிக்காவில் இடம் பெற்றுள்ளவர்களைப் போல, முசௌரி பகுதியிலே லாமாக்களும் அவரைப் பின் தொடர்ந்தோரும் இடம் தேடி அலைந்துகொண்டுள்ளனர். பொருளாதாரத்திலே மந்த நடை போடும் நிதிச் சக்கரம், நீதிச் சக்கரத்தின் நிழலிலே பதுங்கத் துடிக்கும் தலாய்லாமாவின் பரிவாரங்களுக்குப் பக்கபலமாக நகர்ந்து வருகிறது! திபேத்திய நிகழ்ச்சிகளுக்காக உலகத்தின் எல்லாப் பகுதியினரும், குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்து அத்தனை பேர்களும் அவரவர்கள் சக்திக்கேற்ற அனுதாப உரைகளையும் கண்டனக்குரலையும் வெளியிட்டனர்! இரண்டே இரண்டு இனங்கள்தான் இந்தக் காரியங்களைக் கண்டித்தன; காரணங்காட்டாமல் கண்ணீர் வடித்தன! ஓர் இனம் இந்தியக் கம்யூனிஸ்ட்கள்; இன்னோர் இனம் சொல்லாமலே புரிந்துகொள்ளக்கூடியது தான்-சீனத்துக் கம்யூனிஸ்ட்கள். திபேத் விவகாரத்தில் தங்களது சிந்தனையும் செயல்களும் செம்மையானவைகளே; செய்யத்தக்கவைகளே என்பது செஞ்சீனத்தின் குரல்! உலகத்திலே எவர் ஏற்றுக்கொண்டாலும் அல்லது எதிர்த்தாலும், அத்தனை பேர்களையும் எதிர்த்து முழக்கமிட நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லியவர்கள் இங்கேயுள்ள தத்துப் பிள்ளைகள்! தமிழகத்திலும் அந்தத் தப்பிப் பிறந்தவர்கள் இருக்கிறார்கள், முன்னேற்றக் கழகத்தின் சொல்லும் செயலும் சரியல்ல என்று பேசிக்கொண்டு! செஞ் சீனத்துச் சொந்தக்காரர்கள் தலாய்லாமாவை முசௌரியைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்று இந்திய சர்க்காருக்குத் தங்கள் துக்கத்தைத் தெரிவிக்கத் துடித்த அவர்கள் தங்களின் துப்பாக்கிகளையே பேச வைத்தார்கள். இந்தியாவின் வடகிழக்கு எல்லையோரப் பகுதிகளைத் தங்களுடைய நாட்டின் சொத்துக்கள் எனச் சேர்த்துக்கொண்டனர். இதனைக் காணச் சென்ற விமானப் படையினரை எல்லையைத் தாண்டி வந்துவிட்டதாகக் குற்றம்சாட்டிப் பிடித்துக் கொண்டார்கள். விமானிகளைமட்டுமல்ல-சீனத்தின் விடுபட்ட பகுதிகள் எனக் கூறி ஏறத்தாழ 48 000 சதுர மைல் பரப்புள்ள இந்தியத் துணைக்கண்டப் பகுதியை செஞ்சீனத்துடன் இணைத்துக்கொண்டுவிட்டார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்து அரசியலில் அமளியிருக்க வேண்டும் என்ற ஆசை எவருக்கும் வரமுடிவதில்லை. காரணம் இங்கேயுள்ள சர்க்கார்களின் கொள்கைகளிலும் திட்டங்களிலும் எண்ணிலடங்காத குழப்பங்கள் இருப்பதுபோலவே, நாட்டிலும் குழப்பநிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. திபெத் விவகாரத்தில் பலவிதமான சர்ச்சைகள் விவாதங்கள், விமர்சனங்கள், விரிவுரைகள் எழுந்து ஓய்ந்த நேரத்தில் கேரளக் கிளர்ச்சிகள் விடுதலை இயக்கம் என்ற பெயராலே துவங்கின, வளர்ந்தன. அவை முடிந்த சில நாட்களிலேயே கல்கத்தாக் கலவரங்கள் காட்சி தருகின்றன! இப்போது இந்திய சீன எல்லைகளில் தொல்லைகள் துணைக்கண்டத்து அரசியிலே புதிய உருவம் பெறுகின்றன. பழைய உருவங்களை-தன்மைகளை அகில இந்தியக் கட்சிகளும், அவைகளை அண்டிப் பிழைக்கும் அனுச்சாரக் கட்சிகளும் அடிக்கடி மாற்றிக்கொள்கின்றன சீனக் கம்யூனிஸ்ட்களின் சில துணிவான செயல்கள் அவர்களின் துரோகத்தை வெளிபபடுத்துவதாக இருந்தாலும், தில்லி சர்க்காரின் தூக்கத்தைக் கலைத்து எழுந்து நடமாடச் செய்தமைக்காக நன்றி கூறத்தான் வேண்டும். பலம்பொருந்திய மத்திய சர்க்கார் என்ற பெயரிலே பெருமையடித்துக்கொண்டு கழிந்துபோன பன்னிரண்டு ஆண்டுகளாகக் கோலோச்சுபவர்கள் இப்போதுதான் வடகிழக்குப் பகுதியில் சரியான எல்லைகள் இல்லை என்கிறார்கள். இந்தியாவுக்கும் திபேத்திற்கும், இந்தியாவுக்கும் சீனத்திற்கும் ஏற்பட்டுள்ள 'மக்மோகன்' எனப்படும் எல்லைக்கோடு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று செஞ்சீனத்தவர் செப்புகின்றனர்! இந்தியக் கம்யூனிஸ்ட்கள், அவர்களுடைய ஆசைகளுக்கு அபிநயம் பிடிப்பதுபோல ஆய்வுரைகளைத் தருகிறார்கள் எதனையும் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று! இந்திய மண்ணிலிருந்து வெளியேறுவதற்கு விருப்பம் இல்லை சௌஎன்லாயின் படையினருக்கு; எடுத்துக் கொண்ட பகுதிகளை-சேர்த்துக் கொண்ட இடங்களை, விலக்கிக் கொள்ளவும் விருப்பமில்லை! இங்கேயுள்ள சர்க்கார் பாரத சர்க்கார் எந்தெந்தப் பகுதிகள் எதிரிகளால் எடுத்துக்கொள்ளப்பட்டன என்பது கூடத் தெரியாமல் செங்கோட்டையிலே கொடிகட்டி ஆளுகிறது! தங்களுடைய மூதாதையர்களான பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலிருந்தே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மக்மோகன் எல்லையினை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பண்டிதர் கெஞ்சிப் பேசுகிறார். ஆனால் இடந்தேடி அலைகிற சௌஎன்லாயும் அவரது படையினரும் எந்த வேண்டுகோளையும் ஏற்றுக்கொள்ள மட்டுமல்ல; விவாதிக்கவும் முன் வரவில்லை. இந்தியாவைக் கண்டுபிடித்து, உலகச் சரித்திரம் படித்துக்காட்டிய பண்டிதருக்குப் பழைய பாடங்களை நினைவூட்டிப் புதிய சரித்திரங்களைப் பற்றிச் சொல்கிறார் சௌஎன்லாய் எனப்படும் பீகிங் நகரத்துப் பிரதமர்! அவைகளில் அன்பு முத்திரை பொறிக்கிறார்கள் இந்தியக் கம்யூனிஸ்ட்கள்!

இந்தியத் துணைக்கண்டத்தில் எல்லைப் பிரச்னையென்பது ஒரு நிரந்தரமான பிரச்னையாகும்! இந்தியாவிற்குள் மாநிலங்களில் எல்லைகளையே சரியானபடி வகுத்துத் தகராறுகளைத் தீர்த்துவைக்காத புதுதில்லி ஆட்சியாளருக்கு செஞ்சீனத்தினர் அபகரித்துக் கொண்ட பகுதிக்கு சரியான எல்லையினைக் குறிப்பிட்டுக் காட்டுவது கடினமான காரியமாகத்தான் இருக்கமுடியும். இந்தியா விடுதலை பெற்றுவிட்டதென்று சொல்லப்பட்ட நாட்களிலேயே இந்த எல்லைகளைச் சரியானபடி உருவாக்கியிருக்க வேண்டும். பஞ்சசீலம் பேசுவதற்கு முன்னால் இதனைச் செய்திருந்தால் சீனக் கம்யூனிஸ்ட்களும் இந்தியக் கம்யூனிஸ்டகளும் பஞ்சசீலத்தின் பெயர் சொல்லி இந்தியப்பகுதிகளைத் தங்களுடையதென்று சொல்லிக் கொள்ளத் துணியமாட்டார்கள்! சீனக் கம்யூனிஸ்கள் ஆக்ரமிப்புச் செய்தபோது பஞ்சசீலங்களை பஞ்சுபஞ்சாக அடித்துத் துரத்திவிட்டார்கள்-இந்திய சர்க்கார் அழுகுரலில் சமாதானம் கேட்கும்போது 'பஞ்சசீலத்தின்படி நாம் பேசித் தீர்ப்பாம்' என்று பதில் தருகிறார்கள்! பாரதத்தின் பிரதமர் எவ்வளவு உயர்ந்த தரத்தில் ஏமாந்துவிட்டார் என்பதை. மாநிலங்களின் மேல்சபையில் பேசியபோது ஒப்புக்கொண்டு வெளியிட்ட வார்த்தைகள் அறிவிக்கின்றன.

"I saw no reason at that time' six or eight years ago, to discuss the question of frontiers with the Chinese Government because **Foolishly**, if you like, I thought there was nothing to discuss. Possibly it was an error or mistake not to have this particular fact before the House then, I am prepared to admit it."—செஞ்சீனத்தின் பெருமைகளைச் சொல்லி, பீகிங் நகரத்துச் சீமான்களுடன் விருந்துக்குமேல் விருந்துண்டு, குமாரி இந்திராவும் களிக்க, மாசேதுங்குடனும் சௌஎன்லாயுடனும் கைகுலுக்கி, சமாதானப் புறாக்களைப் பறக்கவிட்டு மகிழ்ந்த நேரத்தில், எல்லைகளை நினைக்கத் தவறியது முட்டாள்தனம் என்பதைப் பண்டிதர் அவர்கள் இப்போது தான் உணர்ந்துகொண்டுள்ளார். இந்திய அரசியலில் எத்தனையோ பேர்களின் சொற்களைப் பற்றியும் செயல்களைப்பற்றியும் மிக

— 8-ம் பக்கம் —

காரைக்குடிக் கவியரங்கம்

குறள் நெறிக் குடும்பம்

7. தலைவி.

வணக்கம்

மொழிக்குடும்பத் தலைமகளே! தமிழே! தாயே!
மூத்தவளே! முதற்பொருளே! வணக்கம், அம்மா!
மொழிக்கடலில் முத்தெடுத்துக் கவிதை கோத்து
முடியரசாய்ப் பவனிவரும் கவிஞர் வேந்தே!
முழக்கமெலாம் இனம்நாடு; படைத்த நூற்கள்
முனைவதெலாம் தமிழ்வளர்ச்சி; நினைத்தால் உன்றன்
வழிக்குவரக் கவிசொரியும் கண்ண தாச!
"வணங்காத முடி"யாரே! வணங்கு கின்றேன்.

குறள்நெறிக்கு விழாவெடுத்து, வாழ்வின் கொள்கை
குறளான தேனப்பன் கண்ட, எங்கள்
குறட்கழகம் வளர்க்கின்ற செயலின் தீரன்
குணக்குன்று மெய்யப்பன் இட்டார் ஆணை!
குறள்நெறிவாழ் குடும்பத்தின் தலைவி தன்னைக்
கூறுவென்றார். குறுகுறுத்துத் துடிக்கும் நெஞ்சு.
குறள்தந்தோன் வாழ்ந்தநெறி சொன்ன பாதை,
கொண்டெழுந்த புதுக்கவிதை அரங்கு ஏறும்.

இல்லாளை, இவ்வரங்கில் இல்லாள் தன்னை,
இன்றெனக்கு இல்லாளை, இனிமேற் பற்றும்
நல்லாளை, குறள்நெறிசார் குடும்பம் பெற்ற
நங்கைதனைத் தலைமகளை அரங்கின் முன்னர்
சொல்லாலே நடப்பயிலச் செய்வேன்; வெய்யில்
சுடுங்காலை, "குறள்"நிழலில் தண்மை எய்தும்
நல்லோரே! தாய்க்குலத்தீர்! நட்புச் செல்வீர்!
நம்குடும்பத் தோரேகை கூப்பு கின்றேன்.

தலைவியெனத் தலைப்பிட்டார்; இப்போ தெங்கும்
தலைவிமயம்! நாடாளும் கட்சி தொட்டுக்
கலையுலகும் தலைவியரால் இயங்கக் கண்டோம்.
கன்னியரை மாலையிட்ட சிலரைக் கேட்டால்,
"தலைவலியோ? பெரும்பேயோ? எமக்கும் ஊழின்
தலைவிதியோ?" என அழுவர். புலம்பல் கேட்கும்.
நிலைகுலைந்த அவைவேண்டாம். மறப்போம்! இங்கு
நெறிவாழும் தலைவியரைப் பார்ப்போம் வாரீர்!!

(வேறு)

தலைவி

வானிறங்கி வந்தகொடி மின்னலிடை கொண்டாள்;
வளைந்தசிறு வில்லிமையில் கெண்டைவிழி துள்ளும்.
தேனிழியும் பொதிகைமலை விளைந்ததமிழ் போலத்
தீஞ்சுவையாள்! பார்வையிலே மனந்திருடும் கள்ளி.
மானினத்தை ஒப்பமருள் மைவிழியின் நோக்கு.
மாதர்குலப் பேரரசி வடிவழகி வந்தாள்.
ஏனெங்கே எனக்கேட்டால், எப்படித்தான் சொல்வேன்.
எனைமறந்த கனவுலகில் தலைவிதனைக் கண்டேன்.

அறத்துப்பால், பொருளின்பால், அதற்கும் அப்பால்
அகத்துறையாம் இன்பத்துப் பாலும் சொல்லி,
அறத்தாலும் பொருளாலும் வருவ தின்பம்.
அத்தனையும் பின்னுவது இன்பம் என்ற
திறத்தைத்தான் திருக்குறளில் மூச்சாய் வைத்தார்.
தேமொழியர் இல்லறத்துத் தலைமை ஏற்றார்.
குறள்நெறியில் குடும்பத்"தேர்" உருட்டும் அச்சு
கொவ்வையிதழ்த் தலைவியென்றால் முழுதும் உண்மை!

குடும்பத்தில்

மணப்பொருத்தம், உருப்பொருத்தம், எதையும் தாங்கும்
மனப்பொருத்தம்; வாழ்வியலில் துணையாய் நிற்கும்
குணப்பொருத்தம்; கலைப்பொருத்தம்; இருவருக்கும்
கொள்கையினில் எண்ணத்தில் பொருத்தம்; வீட்டின்
பணப்பெருக்கை வளர்ப்பதிலே பொருத்தம்; சேரும்
பணம் அறத்தில் செலவாக்கும் பொருத்தம் கொண்டார்
கணப்பொழுதும் நெஞ்சகலாப் பொருத்தம்; இல்லக்
கட்டமைப்பிலே வழுவாத காதற் செல்வர்.

நினைவுகள்

மயிலாடும் பூக்காட்டில், பொழிலில், ஆற்று
மணற்காட்டில், மாலைதரும் தங்கப் பூச்சில்,
கயலோடும் மதிமுகத்துத் தலைவி, அன்று
காளையின்தோள் வீழ்ந்ததையும், அவனி டத்தே
மயலாகி மனமொத்துக் கூடி, இன்ப
மயமாகக் கிடந்ததையும் நெஞ்சில் எண்ணிச்
செயலின்றிக் கள்ளுண்டாற் போல்மயங்கிச்
சிந்தித்துக் களிப்பெய்தித் திளைப்பாள்; பின்னர்

குவிமுல்லைச் சரப்பல்லில் நிலவு பூக்கும்;
குமிழ்சிரிப்புக் கொப்பளிக்கும் அவனைக் கண்டால்.
சுவைக்கனியாள்; பொன்மின்னும் செல்வி; காதற்
சுவைநிலையில் சொல்மறந்து சிலையாய் நிற்பாள்.
செவிபாயும் ஈட்டிவிழி துள்ளும்; வீரத்
தலைமகனை அப்படியே அள்ளும். நெஞ்சின்
தவிப்பெல்லாம் முகம்காட்டும். தலைவி நோக்கித்
தலைவன்கண் மோதுகையில் நிலத்தைப் பார்ப்பாள்.

அன்றொருநாள்; தலைவனைத்தான் பிரிந்த நோயால்
அனிச்சப்பூ மெல்லியலைப் பசப்புக் கவ்விக்
கன்றிவிட; தாய்ஏசத் தோழி காத்த
கதையெல்லாம் மனத்திரையில் ஓடும்; நேரம்
சென்றுவிடும் அம்மாவென்(று) அழைக்கும் சேயின்
குழல்மொழியில் நினைவடங்கி நிற்கும் கால்கள்
முன்றிலுக்கு விரைந்தோடி மகனைத் தூக்கி
முத்தமிட்டாள்; முகம்திருத்தி இனிப்புத் தந்தாள்.

மங்கையர்க்கு அரசியெங்கள் தந்தப் பாவை
மனைவிளக்கு; மனைதிரும்பும் தலைவன் நோக்கித்
தங்கக்கை கொணர்கின்ற தண்ணீர் கூடத்
தமிழ்போலத் தித்திக்கும் பழச்சாறாகும்.
அங்கிங்கும் பணிசெய்த அலுப்பு மாறும்;
அரும்புகிற இளஞ்சிரிப்பில் களைப்புத் தீரும்.
செங்கனிவாய் இன்சொற்கள் தலைவன் உள்ளம்
சிலிர்க்கவிடும்; புறவுலகம் மறந்தே போகும்.

தலைவி கடமை

கிழக்கினிலே 'எழுபரிதி' கருப்(பு) இருட்டைக்
கீறுவதால் சிவப்பாகும் வானம். மக்கள்
எழக்கூவும் கிழச்சேவல். கத்தரித்த
எழிற்கொண்டை மடிந்தாடும், விடியற் போது!
வழக்கர்போல் எழுந்துமனை திருத்தி, இல்லாள்
வேலைகளைத் துவக்கிடுவாள்; துயிலில் மீண்டும்
விழக்கூடும் இரவுவரை பணிகள் ஆற்றி
வீட்டினிலே "அவ்வீட்டை" விளக்கம் செய்வாள்.

காய்கறிகள் குவிக்கின்ற தோப்புக் காரன்;
கடைக்கணக்கர்; ஏவல்செயும் பணியாள்; உண்டி
வாய்மணக்கச் சமைத்திடுவோன் இவரை எல்லாம்
வழிநடத்தும் இல்லத்து அரசி ஆட்சி!
வாய்மொழியால், கண்ணோக்கால், தலைவி இட்ட
வகைசெய்வர்; குடும்பத்துள் அமைதி வாழும்!
சேய்ஊட்டி, சேய்தனக்கே ஊட்டக் கொஞ்சிச்
சிறுவிழிக்கு மையிடுவாள், கன்னம் கிள்ளி.

கொண்டவர்க்கு மனம்கொண்ட வகையில், பாலில்
குளித்திருக்கும் பணியாரம்; அப்பம்; நெய்யை
உண்டிருக்கும் இளந்தோசை; அமிழ்தம் செய்வாள்.
உருள்கிழங்கை ஆவாரம் பூப்போல், சீவி
உண்டிக்கு வறுத்திடுவாள். தலைவன் நாவில்
உமிழ்சுரக்கச் சுவைபடைத்துச் சுகத்தைச் சேர்ப்பாள்.
பெண்டிருக்கு இதுதானே வேண்டும். எங்கள்
பெருங்குடும்ப விளக்கிற்கு இதுவே பண்பு!

வரும்பொருளை உரைப்பதிலே அமைச்சர் ஆவாள்;
வாழ்க்கையெலாம் துணைவியெனத் தலைவி நிற்பாள்.
இரும்பொருளைச் செட்டாக்கிக் கணக்குக் கொண்டு
எதிர்வருங்கால் இடித்துரைக்கும் நிலையும் உண்டு.
அரும்பணிந்து "இதழ்"ஊட்டித் தோளில் வீழ்ந்து
அணைமறந்து ஆளனுக்கும் தலைவி ஆவாள்.
அருந்தலைவன்; அடலேறு; எனினும் "பள்ளி
அறை"க்குள்ளே அவன்அடிமை! இதுதான் உண்மை!

பொருள்கொணர்ந்தால் தலைவியிடம் கொடுப்பீர்! இன்றேல்
பொருள்பறிக்கப் படும்அறிவீர்! குடும்பக் காட்சி!
பரிவுடைய கவித்தலைவ! காரை முத்தப்
புலவரையா! நம்குடும்பக் கழகம் ஓங்கப்
பொருள்பெருக்கிப் பணிமனையை எழுப்ப, உங்கள்
பொன்னடியை வேண்டுகின்றேன். அவையத் துள்ள
அருள்மனத்தீர்! குறட்குடும்பம் வாழ, பொன்னை
அளித்திடவே மிகஇறைஞ்சி அமர்வேன். நன்றி!

★

இக்கவிதையை அரங்கேற்றியவர் திரு. நாவுக்கரசன்.
இத்துடன் காரைக்குடிக் கவியரங்கம் முற்றுப்பெறுகிறது.

திருக்குறள்

பரிமேலழகர் உரை சரியா? தப்பா?
"ஒழுக்கு" என்ருல் என்ன?

திருவள்ளுவர் யாத்த திருக்குறள் மூன்று பெரும் பிரிவுகளை உடையது. அதனுல் அது 'முப்பால்' எனப் போற்றப்படுகின்றது. அவை, அறத்துப்பால், பொருட்பால் காமத்துப்பால் என்பன. அறத்துப்பாலில் பாயிரத்தை நான்கு அதிகாரத்தில் கூறுகின்ருர். அதில் இரண்டாவது அதிகாரம் 'வான்சிறப்பு' என்ற பகுதி.

'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தில், முதலிரு குறளிலும் மழையின் பயன் கூறி-ஐந்தாவது குறளில்மழையின் ஆற்றலைப் பெற வைத்து-மற்றுள்ள குறள்களில் மழையின்மையால் ஏற்படும் கேடுகளைத்தொகுத்து உரைக்கின்ருர். கெடுதிகளைக் கூறும் குறள்களில் – இறுதியாக உள்ள குறளைப் பற்றியதே, இவண் விரிவாகும் கட்டுரை.

'வானம்' என்ருல் 'விண்பரப்பு' என்று பொருள்படும் உலகவழக்கில். ஆனுல், செய்யுள் வழக்கில் அச்சொல்லுக்கு வேறு பொருள் உண்டு. வானிலிருந்து ஒழுகும் மழையை வானமென்றே குறிப்பிட்டார், வள்ளுவப் பெருந்தகை. இதை இலக்கண நூலோர் ஆகுபெயரென்பர். 'மழை' யென்ற பொருளில் 'வானம்' என்ற சொல், நான்கு குறட்பாக்களில் ஆட்சிபெற்றுள்ளது.

வானின் றுலகம்
வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரல்
பாற்று
(வான்சிறப்பு-1.)

சிறப்பொடு பூசனை
செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும்
ஈண்டு
(வான்சிறப்பு-8.)

தானம் தவமிரண்டும்
தங்கா வியனுலகம்
வானம் வழங்கா
தெனின்
(வான்சிறப்பு-9.)

நீரின் றமையாது
உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையா
தொழுக்கு
(வான்சிறப்பு-10.)

'மழை' என்ற பொருளில், 'விண்' என்ற சொல்லும், 'புயல்' என்ற சொல்லும் ஆகுபெயராக இரு குறட்பாக்களில் ஆளப்பட்டுள்ளன.

விண் இன்று பொய்ப்பின்
விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி
(வான்சிறப்பு-3.)

ஏரின் உழாஅர்
உழவர் புயலென்னும்
வாரி வளம் குன்றியக்கால்
(வான்சிறப்பு-4.)

எனவே, இவ்வதிகாரத்தில் வரும் வானும் – விண்ணும் – புயலும் – மழையையே குறிக்கும்.

'நீரின்று அமையாது
உலகெனின் யார்யார்க்கும்
வானின்று
அமையாது ஒழுக்கு'

என்ற குறளின் வள்ளுவரின் கருத்து என்ன? அதற்குப் பரிமேலழகர் கொண்ட விளக்கம் ஏற்புடையது தானு? என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இக்குறளுக்குப் பிறரெல்லாம் கொண்ட உரை வேறாகவுள்ளது.

மணக்குடவர்: நீரையின்றி உலகம் அமையாதாயின், யாவர்க்கும் மழையையின்றி ஒழுக்கம் உண்டாகாது. ஒழுக்கம்-விரதம்; இஃது ஆசாரம் கெடுக்கும் என்றது என்பர்.

காளிங்கர்: "இவ்வுலகமானது நீரையின்றி அமையாதாயின் இங்குள்ள உயர்ந்தோர் யாவர்க்கும் இழிந்தோர் யாவர்க்கும் மழையையின்றி அமையாது அவரவர் ஒழுகும் ஒழுக்கு" காட்டுவர்.

திரு. வி. க: "குணம் இன்றி உலகம் அமைதியுறுதெனில் எவரெவர்க்கும் அக்குணத்துக்குரிய ஒழுக்கம் மழையின்றி உண்டாகாது."

"உலகுக்கு அமைதி வேண்டும். அமைதிக்கு நீர்மை வேண்டும். நீர்மைக்கு ஒழுக்கம் வேண்டும். ஒழுக்கத்திற்கு மழை வேண்டும். இம்முறையில் மழையின் சிறப்பை ஆசிரியர் விளக்கியவாறு காண்க" என விளக்குவர்.

மணக்குடவர்-காளிங்கர்- திரு. வி. க. என மூன்று பெருமக்களும் கொண்டவுரை ஒரு தன்மைத்தாகவே உள்ளது. உலக வொழுக்கம், மழையின்றேல் மாறிவிடுமென்றே இம்மூவரும் வற்புறுத்துகின்றனர். ஒரு வகையில், இவ்விதக் கருத்துப்படும் இவ்வுரையும் சிறந்ததுதான். ஆனுல், பரிமேலழகர் கொண்ட உரை இவற்றைவிடச் சிறப்புடையதாக மிளிர்கின்றது. அவ்வுரையைப் புரிந்துகொள்பவர் தாம் தவருகப் புரிந்துகொள்கின்றனர். அதனுற்ருன், இவ்வுரை சிறக்காமல் நின்றுவிடுகிறது.

திருக்குறளுக்கு எத்தனையோ சான்ருேர் உரை எழுதியிருப்பினும், அவ்வுரைகள் எல்லாவற்றிலும், சிறந்த உரையெனப் போற்றப்படுவது – புகழப்படுவது – பரிமேலழகர் உரைதாம். அதற்குக் காரணம் இல்லாமலில்லை மேலே குறிப்பிட்ட குறளுக்கு உரை வரைந்ததுபோல் பல குறட்பாக்களுக்குச் சிறப்பான உரை வரைந்துதவியதே போதுமான சான்ருக அமையும். எனினும், சில குறட்பாக்களுக்கு, ஆரியக் கருத்தின் அடிப்படையில் பொருந்தாத உரையும் எழுதியுள்ளார் என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும்.

'நீரின் றமையா
துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு'

என்ற குறளுக்குப் பரிமேலழகர், "எவ்வகை மேம்பட்டார்க்கும் நீரையின்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையரு தொழுகும் ஒழுக்கும் வானையின்றி யமையாது" என்று பொழிப்புரைத்தார்.

"இடையரு தொழுகுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல் நீர் இன்று அமையாது உலகென்பது எல்லாரானும் தெளியப்படுதலின் அதுபோல ஒழுக்கும் வானின்று அமையாமை தெளியப்படும் என்பார், நீரின்றமையா துலகெனின் என்ருர்" என்று விளக்கவுரை தந்தார்.

இப்பொழிப்பையும். விளக்கத்தையும் கற்கும், சான்ருேர் உள்ளிட்ட பலரும் தவருகவே பொருள் கொள்கின்றனர். அதை நினைக்கும்பொழுது தான் உளம் வேதனைப்படுகின்றது. அதனுலேதான், பரிமேலழகருடைய உரை விளக்கமும் சிறப்படைவதில்லை.

"ஒழுக்கு" என்பதை "வானிலிருந்து ஒழுகும் நீர்த்தாரை" என்றே கொள்கின்றனர் பலரும். வானிலிருந்து ஒழுகும் மழையும், இடையருதுதான் ஒழுகுகின்றது. அதனுல், மழையின்றேல் அவ்வொழுக்கும் இல்லை எனக் கூறுகின்றனர். அக்குறளிலுள்ள சொல்லின் தொடர்பையும் எடுத்துக் காட்டுகின்றனர். வானிலிருக்கும்பொழுது மழை; அது வானிலிருந்து ஒழுகி வரும்பொழுது ஒழுக்கு; அவ்வொழுக்கு நிலத்தில் பட்டதும் நீர் எனப் பெயர் பெறுகின்றது. இம்மூன்று சொல்லும் இக்குறளில் அமைந்துள்ளமை காண்க' என விளக்கம் வேறு தருகின்றனர். இவர்கள் தரும் இவ்வியப்பான விளக்கத்திற்குப் பரிமேலழகர் உரையைச் சான்று காட்டுகின்றனர். என்னே இவர்தம் அறிவிலும் நின்று நிலவி வருகிறது? பின்னர் வள்ளுவரின் உட் கருத்தும் - பரிமேலழகரின் உரைத் தெளிவுந்தான் என்ன?

'ஒழுக்கு' என்பதற்கு வள்ளுவர் கருதிய பொருளும் – பரிமேலழகர் கொண்ட கருத்தும் 'நீரின் ஓட்டம்' என்பதே. முதலில் ஒழுகுதலுக்கும் ஓடுதலுக்கும் வேறுபாடு தெரிந்து கொள்ள வேண்டும். கலத்தில் ஏற்பட்ட ஓட்டையின் வழியாக நீர் வெளி வருவதை 'ஒழுகுதல்' என்கிருேம். காட்டாற்று வெள்ளத்தைக் கண்டு 'நீரோட்டம்' என்கிருேம். இதில், 'ஒழுக்கு' என்பது, மேலிருந்து கீழ்நோக்கி வருவது. 'ஓட்டம்' என்பது, பக்கவாட்டில் ஓடுவது.

இடையருது ஒழுகுதல் என்பதற்குப் பரிமேலழகர் "எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல்" என விளக்கம் கூறுகின்ருர். வானத்திலிருந்து ஒழுகும் ஒழுக்கு என்று கொள்பவர்கள், இதையாவது செம்மையுறத் தெரிந்துகொள்ள வேண்டாமா? வானிலிருந்து ஒழுகுகின்ற ஒழுக்கு எக்காலத்துமா ஒழுகுகின்றது? சில காலம் ஒழுகுவதில்லையே! அதுவும் மழை பொழியும் நேரந்தவிர மற்ற காலங்களில் ஒழுகுவதில்லையே! அதுவும், எவ்விடத்தும் ஒழுகவேண்டும். ஓரிடத்தில் ஒழுகும்பொழுது பிறிதோரிடத்தில் ஒழுகுவதில்லையே! **'எக்காலத்தும் எவ்விடத்தும்'** என்பதற்கு, **'என்றும் நிலைபெற்றுள்ள'** என்பதுதான் பொருள். நீங்கள் கூறும் ஒழுக்கு என்றும் நிலைபெற்றதா? அது காலத்தையும்-இடத்தையும் நீக்கமறப் பொருந்தியுளதா? பின்னர் ஏன் பரிமேலழகர் கூறிய கூற்றைத்தான் யாங்கள் மொழிகின்ருேம் என்று கூறுகின்றீர்கள்? தவறைத் திருத்திக்கொள்ளத் தன்மானம் இடந்தர மறுக்கின்றதா? அங்ஙனமெனின் அதற்குத் தன்மானமென்று பெயர் பொருந்தாதே!

'ஒழுக்கு' என்பது நீரின் ஓட்டம்' என்று பொருள் பட்டாலும், மழையின்றேல், பூமிமேல் ஓடும் ஆறு முதலியன வற்றிவிடும் என்று தானே பொருள். "மாற்ருரில் மயங்கவுரைப் போர் உரையினும் இவ்வுரை மட்டமாகத்தானே இருக்கிறது?" என்று வினவலாம். ஆனுல், பொருளின் உண்மை அதுவல்ல. அவ்வுண்மைப் பொருளைக் காணப் புதைபொருள் ஆராய்ச்சி நடத்தி விளங்க வைக்க வேண்டும்:

எடுத்துக்கொண்ட குறளில், வானம் (மழை)–நீர்-ஒழுக்கு - என்று முறைத்தொடர்கள் வருவதைக் இவ்வகையில் கொள்ள வேண்டும். 'ஒழுக்கு' என்பதை 'நடுவண்' இருத்திப்பொருள்கொள்ளக்கூடாது.

'மழையின்றி நீரில்லை – நீரின்றி ஒழுக்கில்லை-நீரும் ஒழுக்குமின்றி உலகியல் இல்லை' என்பதை மேற்கண்ட பாடம் தெளிவாக விளக்கும்.

நிலத்தின் மேற்பரப்பை வைத்துக் கொண்டு, பரிமேலழகர் உரையைக் கண்டால். அது சற்றும் பொருந்தி வராது. நிலத்தின் அடிப்பகுதியையே, பரிமேலழகர் குறிப்பிட்டு, அவ்வடிப் பகுதியில் ஓடும், நீரின் ஓட்டத்தைத் தான் அவர் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவருடைய கருத்தும் இதுதான் என்பதை இவ்வுரைச் சிறப்பால் உணர்கின்ருேம்.

நிலத்தினடியிலிருந்து நமக்குக் கிடைக்கும், திடப்பொருள்-திரவப் பொருள்களைக் கணித்தல் முடியாது. தங்கம் – வெள்ளி – செம்பு-இரும்பு – நிலக்கரி–அப்பிரகம் முதலிய திடப் பொருள்களும்; உழவுத் தொழிலுக்கும்-மக்கள் பருகுவதற்கும் பயன்படும் கிணறுகளில் சுரக்கும் நீரும்-மண்ணெண்ணெய் முதலிய திரவப் பொருள்களும்-நமது நன்மைக்குக் கிடைக்கின்றன. **இப்பொருள்கள் அனைத்தும், மற்ற வேறு பொருள்களும் குறைவின்றிக் கிடைக்க வேண்டுமானுல், மழை நன்ருகப் பெய்யவேண்டும். நிலப்பரப்பில் விளையும் பொருள்கள் மாத்திரமல்ல; நிலத்தின் அடிப்பகுதியில் விளையும் பொருள்களுக்கும் மழை இன்றியமையாது வேண்டப்படுவதொன்ருகும்.**

'நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி தான்நல்கா தாகிவிடின்' என்ற குறளில், மழையின்றேல்; கடலில் விளையும் பொருள்களும்–உயிர்ப் பொருள்களும் பெருக்க மடையாது என்பதைப் புலப்படுத்துகின்ருர். 'மழையின்றேல்-கடலில் நீர் குறைந்துவிடும்' என்ற பொருளல்ல இங்கு கொள்ளப்படுவது. "இம்முறையில் பொருள் கொண்டால் உரை சிறப்படைய முடியுமா?" என்பதைச் சிந்தித்தல் நலம்.

—10-ம் பக்கம் —

மகிழ்கிருேம்.

இராமனுதபுரம் "தென்றல்" இதழ் விற்பனையாளர், திரு. கே. வி. குருசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி சேதுராசு அம்மாள் அவர்கள் 20-9-'59 ஞாயிறு மாலை 6 மணிக்கு ஓர் ஆண் மகவு ஈன்ருர். தாயும் சேயும் நலா்.

வஞ்சிக்கப்பட்ட "பஞ்சசீலம்"; வளைக்கப்பட்ட இமய எல்லை.

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

மிக வேகமாக அவசரமாக 'முட்டாள்தனம்' என்று விமர்சனம் செய்திருக்கிறார். இப்போது தன்னைப் பற்றி-தன் செயல்களைப் பற்றி முட்டாள்தனமாக இருந்துவிட்டேன் என்று மதிப்பிடவேண்டிய நிலைமையிலே இருக்கிறார்! பல ஆண்டுகளாக சீனக் கம்யூனிஸ்ட்களின் சதிவேலைகளை, "சுரண்ட்" போன்ற ஏடுகள் வெளியிட்டன! ஏதோ ஒரு வகையான மயக்கத்திலோ, கம்யூனிஸ்ட்கள் அளித்த பாராட்டு மொழிகளில் மயங்கியதலோ, இந்திய சர்க்கார் பத்திரிகைச் செய்திகளைக் கேட்க மறுத்து விட்டார்கள்! திறம்படச் செயல்படத் தவறிவிட்டு இப்போது எல்லைகளை இழந்து தவிக்கிறார்கள்!

இந்தியத் துணைக் கண்டத்தின் மாபெரும் பிரதமர் உலகின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் ரோசா மாலைகளால் வரவேற்கப்பட்ட 'இராசதந்திரி', சீனப் படையினர் அமைத்துக் கொண்ட புதிய பாதைகளைப்பற்றியுந் தெரியாது என்றும் சொல்கிறார். "The Government did not know where the road was ?" - ஆட்சித் திறமைக்கு எங்களைவிட்டால் இந்த நாட்டில் வேறு எவர் இருக்கிறார்கள் என்று மேடை அதிரப் பேசுகின்ற காங்கிரஸ்காரர்கள் பண்டிதரின் இந்தப் பொன்மொழிக்கு என்ன சொல்வார்களோ? இந்திய - சீன எல்லைகளைக் குறித்து எண்ணிப் பேசாதவர்கள் எவருமில்லை. எல்லோருக்குமே நல்ல முடிவினைக் காண வேண்டுமென்ற ஆசையிருக்கிறது. சௌஎன்லாய் சீனப் பார்லிமெண்டிலும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய சபையிலும் மிக விளக்கமாகப் பேசி, "இந்தியப் பகுதிகள் என்று சொல்லப்பட்டவை உண்மையில் சீனப் பகுதிகளே என்றும், அவைகளை நாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை. இந்தியப் படையினர் தான் வரம்பு மீறி எல்லையைத் தாண்டி, சீனத்திற்குள் புகுந்துவிட்டனர்" என்றும் தெரிவித்துவிட்டார்! நம்முடைய சந்தேகங்கள் மேலும் வலுப்பட்ட நிலையிலே மக்கள் சபையில் கம்யூனிஸ்ட்களைத் தவிர்த்த மற்ற உறுப்பினர்கள் அனைவரும் எல்லையோரச் செய்திகளை மிக முக்கியமாக விவாதிக்க வேண்டும் என்ற அவசர நிலையை உருவாக்கினார்கள்! பண்டிதர் தன்னுடைய தோல்விப் பட்டியல்களை, சௌஎன்லாய் என்ற உள் கட்சிப் போராட்ட வீரர் தன்னை ஏமாற்றிப் பேசிய விந்தையான செய்திகளையும் வேதனையோடு வெளிப்படுத்தினார்! மக்கள் சீனு-நவசீனு-உழைப்பால் உயர்ந்த நாடு என்ற பாராட்டுக்குரிய நல்ல செய்திகளையும் இணைத்து, அந்தப் பெரிய நாடு இப்படித் தவறான வழிகளில் முறைகளில் இந்தியாவுடன் தகராறு வளர்ப்பது கவலைக்கிடமானது எனக் கூறினார்! கிருபாளினி போன்ற உறுப்பினர்கள் பலர் சர்க்காரின் கையாலாகாத தன்மைகளையும் சீனக் கம்யூனிஸ்ட்களின் அரசியல் நாகரிகமற்ற செயல்களையும் விளக்கிப் பேசினார்கள்! கம்யூனிஸ்ட் தலைவர் டாங்கேயும் பேசினார் வழக்கமான முறையில். எல்லையோரத்தில் நடைபெற்றுள்ள செயல்களை நன்றாகத் தெரிந்த அவர், பேச்சு வார்த்தைகளின் மூலம்தான் இந்தோ சீனத் தகராறைத் தீர்த்து நட்பை வளர்க்க வேண்டும் என்று கூறினார். சீனத்தைக் குறைத்து மதிப்பிடக் கூடாதென்றும், இந்திய சீன உறவினைக் குறைக்கச் சில விசமிகள் முயல்வதாகவும் விளக்கினார். சீனப் படையினரின் செயல்களைப் பற்றி எதுவும் போவில்லை சேர்க்கப்பட்ட இந்தியப் பகுதிகளைப்பற்றியும் ஊமையானார்-ஆனால் 'சீனு இந்தியாவைத் தாக்காது' என்ற உறுதியை வெளியிட்டுத் தனக்கும் தன்னுடைய கட்சிக்கும் உள்ள ஏசண்டுத் தன்மையை, சீனுவின் சார்பிலே தெரிவித்துக்கொண்டார்! இந்தியக் கம்யூனிஸ்ட்களின் நன்றிலையப் பீகிங்கிற்கும் அறிவித்தார்!

இந்தியத் துணைக்கண்டத்திற்கு எதிர்ப்பு எங்கிருந்து வந்தாலும் அதனை முறியடிப்போம் என்பது பிரதமரின் பேச்சு! சீனத்தின் தாக்குதல், எல்லையைத் தாண்டி இடம் பிடிக்கும் ஆசைகள், எனக்குப் புரியாதவைகளாக இருக்கின்றன என்றும் அவரே கூறுகிறார்! இந்தியக் கம்யூனிஸ்ட்களும் வெளிநாட்டு ஆக்ரமிப்பு வந்தால் எதிர்ப்போம் என்று பேசுகிறார்கள். மதுரையில் பேசிய இராமமூர்த்தியாக இருந்தாலும் தில்லியில் பேசிய டாங்கேயாக இருந்தாலும், திருச்சூரில் பேசிய சங்கரனாக இருந்தாலும், வெளிநாட்டுத் தாக்குதல் சீனுவிடத்திலிருந்து வந்தால் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் எதிர்த்துப் போராடுவர் என்று வெளிப்படையாகப் பேசவில்லை. ஆய்வுரைகள், போதனைகள் எல்லாம் இந்திய சர்க்காருக்கும் சீன எதிர்ப்பாளருக்கும்தான் தரப்படுகின்றனவே தவிர, சீன சர்க்காருக்குத் தரப்படவில்லை. சீனு தாக்காது என உறுதி கூறும் டாங்கே, "இந்தியா உங்களைத் தாக்காது. உங்கள் படைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சீனுவைப் பார்த்துச் சொல்லத் துணிவுண்டா? நவசீனத்தின் பிரதமர், பண்டித நேருவுக்கு எழுதியதாகச் சொல்லப்படும் கடிதங்களில், பல நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக எல்லைகள் வரையறுக்கப்படவில்லை என்றும், பண்டைய வரலாற்றுச் சான்றுகள் தான் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றும், பிரிட்டன் உண்டாக்கிய 'மக்மகன்' எல்லைக்கோட்டை ஏற்றுக் கொள்வது அறிவீனம் என்றும், இந்தியாவில் சீனஎதிர்ப்பை நிறுத்த வேண்டுமென்றும் மிகக் கடுமையான மொழிகளிலே கருத்தினைத் தெரிவித்துள்ளார்! "இந்தியப் பிரதமரே! இத்தகைய சட்ட விரோதமான கோட்டை நிர்ப்பந்தம் மூலம் எப்படி சீனு ஏற்கமுடியும்? தனது உரிமைகளைக் கைவிட்டுக் கேவலப்பட முடியுமா? இவ்வளவு பெரிய பகுதியை விட்டுக்கொடுக்க முடியுமா? மக்மோகன் கோட்டை சீனசர்க்கார் அங்கீகரித்துவிட்டது என்று எவ்வழியிலும் கொள்ளமுடியாது!"-சௌஎன்லாய் இப்படி மட்டுமல்ல இந்திய சர்க்கார் 1947 க்குப் பிறகு சீனத்தின் பகுதியான திபெத்தை சேர்ந்த 90 ஆயிரம் சதுர கிலோமீட்டர் அளவுள்ள இடத்தைச் சேர்த்துக் கொண்டுவிட்டதாகவும் தேசப் படங்களிலும் காட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கத் துணிந்துவிட்டார்! "தம்முடைய கோரிக்கைக்கு ஆதரவாக பலாத்காரத்தைப் பயன்படுத்தவும் தயங்காமல் இந்தியா எல்லா வகையான நிர்ப்பந்தங்களையும் சீன அரசாங்கத்தின்மீது கொண்டுவந்தது. அதனால்தான் சீன அரசாங்கம் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கிறது" கடிதத்தின் வேறோர் பகுதி இது! "இந்தியாவே, நீ சீனத்தின் எதிரி" என்று மறைமுகமாகச் சொல்வதற்கும் சௌஎன்லாய் குரலுக்கும் வேறுபாடு இருக்கமுடியாது! இந்த அதிகாரக் குரல் கேட்ட பிறகும் டாங்கே வகையறுக்களுக்குப் புரியவில்லை; விளங்கவில்லை, சீனுவின் தரங்கெட்டசெயல்கள்! "சௌஎன்லாய் அவர்களே! சற்றுப் பொருள் விளங்கப் பேசுவீரா? டாங்கே அவர்களே! உங்கள் மயக்கம் தவிர்த்து, சீனத்தவருடன் உறவுகொண்டாடும் காலம் உமக்கும் வந்ததேன்?" என்று கேட்கவேண்டியது கம்யூனிஸ்ட்களின் கடமையாகும்.

இந்தியத் துணைக் கண்டத்திற்கும் சீனுவுக்கும் இடையிலே உள்ள வரலாற்றுச் சான்றுகளைச் சொல்லி சீனத் தாக்குதல்கள் சரியென்று சாதிக்கிறார்கள் கம்யூனிஸ்ட்கள்! பிரத்தியட்சக் கண்ணோட்டங்களையும், நிலைமைகளையும், அனுபவப்பூர்வமான சாத்தியக் கூறுகளையும், அப்பட்டமான உண்மைகளையும், சந்திர மண்டலத்தை எட்டிப் பிடிக்கும் தூரப் பார்வைகளையும், கொண்டுதான் ஆரிய-திராவிடப் பிரச்னையை அணுகி அலச வேண்டுமென்று நமக்கெல்லாம் சொல்லி, நாம் காட்டிய வரலாற்று உண்மைகளையெல்லாம்-இனப் பெருமைகளையெல்லாம் நடைமுறைக்கு ஒத்து வராதவை என்று கூக்குரல் கிளப்பிய கூட்டம் தான் இன்று இந்திய எல்லைப் பகுதியின் வரலாறுபற்றிய பல விவரங்களைச் சௌஎன்லாயிடம் கடன் வாங்கி நமக்குத் தெரிவிக்க முன் வருகிறார்கள். வரலாற்று அறிவுக்கும் உங்களுக்கும் எத்தனை நாட்களாக தொடர்பு என்று இப்போது நாம் கேட்கலாம். ஆனால் விரும்பவில்லை. கடைசியில் கம்யூனிஸ்ட்கள் வரலாற்றுச் சான்றுகளைச் சொன்னால் ஒப்புக்கொள்ளும் நிலைக்கு வந்தார்களே-அந்த வகையில் தோல்வியை ஒப்புக்கொண்டால் பொதுமன்றத்தில் மன்னிப்புக் கேட்டவர்களாவார்கள். இந்திய சீனத் தகராறு என்றால் வரலாற்றைக் காட்டுவோம்; ஆரிய திராவிட இனப் பிரச்னை, திராவிடத் தனி நாடு இவைகளுக்கு வரலாறு ஆதரவு தருகிறது என்றால் அவைகள் வெள்ளை ஏகாதிபத்திய வாதிகளின் திரிபுவாதக் கருத்துக்கள் என மறுப்போம் என்றுங்கூட அவர்கள் சொல்ல முன்வரலாம். நமக்குக் கவலையில்லை. ஆனால் அவர்கள் அரசியல் அரங்கில் வரலாற்று அறிவினால் தேய்ந்தவர்கள் என்ற உண்மை புலப்படத் துணையாக இருக்கும்! இந்தியப் பகுதிகளைச் சேர்த்து வெளியிடப்பட்டுள்ள புதிய சீனப் படங்களைப்பற்றி இந்தியாவில் சிலர் கூக்குரல் போடுகிறார்கள்; இந்தியா எழுப்பியுள்ள உரிமைகளைச் சீனு ஒப்புக்கொள்ள வேண்டுமென்று பொதுஜன நிர்ப்பந்தம் கொண்டு வர முயல்கிறார்கள். இது புத்திசாலித்தனமல்ல. பெருமைக்குரியதுமல்ல! சௌஎன்லாய் கடிதத்தில் இந்த வாசகம் இருக்கிறது. தேசப் படங்களைக் கண்டித்தது யாரோ சிலர் அல்ல-பிரதமர் நேருதான் முதலிடம் பெறுகிறார். அவரை நேரடியாக "நேருவே, உம் பேச்சு முட்டாள்தனமாக இருக்கிறது" என்று கேட்பதற்குப் பயந்தவர்கள்தான் புத்திசாலித்தனமல்ல என்று மொழிபெயர்த்துத் தமிழகத்துக்குத் தந்திருக்கிறார்கள்? இவ்வளவு நிகழ்ச்சிகளுக்குப் பிறகும்கூட இந்தியக் கம்யூனிஸ்ட்கள் இந்திய சீன உறவு நிலைத்திருப்பதாகவும் நேசம் பலப்பட்டு இருப்பதாகவும், சௌஎன்லாய் மனம் விட்டுப் பேசியிருப்பதாகவும், இந்திய மண்ணிலே உள்ள எதிர்ப்பாளர்கள் எதுவும் பேசக்கூடாதென்றும் தினமும் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள்!

இந்தியத் துணைக்கண்டத்தைக் காப்பாற்றத் தெரியாத காங்கிரஸ்காரர்களும், காட்டிக் கொடுக்கத் தயங்காத கம்யூனிஸ்ட்களும் நாட்டு மக்களின் கவனத்திலே இருக்க வேண்டியவர்கள்! சீனத்தின் கொடுஞ் செயல்களைக் கண்டிப்பவர்கள் யாரோ சிலர் அல்ல! கம்யூனிஸ்ட்களின் பாராட்டுக்குரிய 'பிளிட்ஸ்' என்ற பத்திரிகையும் கூட, சௌஎன்லாயைப் பார்த்து வேகமான வார்த்தைகளைச் சொரிந்துள்ளது. கம்யூனிஸ்ட்களைப் பாராட்டத் தவறாத அந்த ஏடுதான் "No, Mr. Chou, Never! Do not expect us to make you a Gift of Himalayas...! Whole country is behind Nehru (except C. P. I. Comrades). A call to Foreign Friends" என்ற செய்திகளைத் தந்துள்ளது. நல்லெண்ணங்களை நாசமாக்கும் நவசீனத்தின் செயல்களை உலகிலே எவரும் ஆதரிக்கவில்லை. இரஷ்யாவும் கவனிக்க மறுக்கிறது. இந்தியப் பிரதமர் ஏதோ பெரிய சிக்கலைத் தீர்த்துவிட்டவரைப்போல, ஆப்கன் நாட்டுப் பவனியை ஏற்படுத்திக் கொண்டார். எல்லைகளைக் காக்கவேண்டிய இராணுவ மந்திரி கிருஷ்ணமேனன் என்ற பாதிக் கம்யூனிஸ்ட் சீனுவுக்கு இடம் தேடி ஓடிவிட்டார்! இராணுவத் தளபதிகள் பதவிவிலகல் கடிதங்களைத் தூக்கியெறியத் துடிக்கிறார்கள். பண்டித நேருவும் பந்தும் பல பேசி உண்மைகளுக்குத் திரையிடுகிறார்கள்! இந்த நேரத்தில் பலமிழந்த மத்திய சர்க்கார் நேபாளம், சிக்கிம், பூடான் நாடுகளுக்குரிய பாதுகாப்பினைச் செய்தாகவேண்டும் என்ற அவசரத்தை உணர்ந்தால் வருங்காலம் மன்னிக்கும். திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டுவோர்க்கு வடஎல்லையைப் பற்றிய அக்கறையும் கவலையும் ஏன் என்று எவரும் கேட்கத் துணியமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் இதனைக் குறிப்பிடுகிறோம். பாகிஸ்தானும் இந்தியாவும் மோதிக்கொள்வது எப்படி விரும்பத்தகாத செயலோ அப்படித்தான் இந்தியாவும் சீனமும்! ஆனால் சீனத்தவர் தங்களைத் தயார் செய்து கொண்டு இந்திய சர்க்காரை சவாலுக்கு அழைப்பதும், நாங்கள் ஏமாந்துவிட்டோம் என்று ஏக்கப்படுவதும் துணைக்கண்டத்தின் அமைதியைப் போக்கிப் பெரும் அமளியை உண்டாக்கும் என்பதனையும் ஆட்சியாளர் உணரவேண்டும்! அரசியல் கட்சிகளின் பிரச்னை அல்ல இந்திய சீன எல்லையோர விவகாரங்கள்! இந்திய சர்க்காரும் சீனசர்க்காரும் கட்சிகளுக்கு அப்பாலே நின்றுதான் இன்றுவரை கடிதப் போக்குவரத்துக்களைச் செய்துகொண்டுள்ளனர்! இதனைத் தயை கூர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட்களும் ஏனைய அரசியல் கட்சியினரும் அறிந்துணரவேண்டும். "Free men can never sit at a table and discuss any matter of dispute with the slaves of Communism! You can enter into the Communist Party. But there is no Exist!" என்ற அழகுப் பொன்மொழியை அருமைக் கம்யூனிஸ்ட்களுக்கு நினைவூட்டி, இந்த நாட்டுக்குரியவர்களாகச் செயல்படுங்கள் என வேண்டுகிறேன். ★

முகவரி:
திருமதி எஸ். டி. வேலு அம்மையார் எம். ஏ.
37, பிள்ளையார் கோவில் தெரு,
கஸ்பா வேலூர்.

அமைச்சரின் பற்றுக்குறை

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை யின்மீது, சட்ட மன்றத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் பேசிய நேரத்தில், இந்த சர்க்காரின் பட்செட்டில் உள்ள பற்றுக்குறை நிலையைப் போக்க, வரவு செலவு களைச் சரிக்கட்ட, சில நல்ல வருவாயுள்ள-பயனுள்ள திட்டங்கள் கூறினர்கள். அவைகளில் ஒன்ருக "ஆட்டிறைச்சி"த் தொழிலைக் குறிப்பிட்டார்கள். அதாவது ஆஸ்திரேலியாவில் கிடைக்கிற ஆட்டு இறைச்சி இங்கிலாந்திற்கு அனுப்பி விற்கப்பட்டு ஆஸ்திரேலியா தனது பொருளாதார நிலையைச் செம்மைப்படுத்துகிறது. அதேபோல் நம் நாட்டில் விளைநிலங்கள் போக, தரிசகளாகக் கிடக்கின்ற நிலங்களில் புல்பயிர்செய்து, அதன் மூலம் ஆடு மாடுகள் வளர்த்து, ஆட்டு இறைச்சியைத் தயாரித்து, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு ஏன் அனுப்பக்கூடாது எனக் கேட்டார்கள்.

அண்ணு அவர்கள் குறிப்பிட்ட இத்தொழிலைப் பற்றிச் சரிவரப் புரிந்துகொள்ளாதகாரணத்தாலோ, கூறியது அண்ணு-ஆகவே அதைக் குறைகூற வேண்டுமென்ற சிறு மதியாலோ, நமது மாநில அமைச்சர்கள், போகுமிடமெல்லாம், "ஏதாவது திட்டம் தாருங்கள் என தி. மு. கழகத்தாரைக் கேட்டோம். அதற்கு அவர்கள் கறிக்கடை வைக்கச் சொல்லுகிருர்கள்" எனக் கூறி வருகிருர்கள். இந்த மதி அமைச்சர்கள் கேலியாகவோ, கிண்டலாகவோ பேசி வருகிருர்களே ஒழிய, அவர்கள் பேச்சில் எவ்வளவு அறியாமை உள்ளது என்பதைப் பாருங்கள். பொதுவாக இந்த ஆட்டுஇறைச்சித் தொழிலைப் பற்றிப் பார்ப்போமேயானுல்,உள்ளபடியே இந்த அமைச்சர்களின் பேச்சில், உள்ள மடமை எவ்வளவு என்பது தெளிவாகத் தெரியும்.

ஆட்டிறைச்சியைப் பக்குவப்படுத்தி அனுப்பும் தொழிலில் உலகில் முன்னணியில் நிற்பது நியூசிலாந்து நாடாகும். அங்கிருந்து ஆண்டு ஒன்றுக்கு 400,000,000 (நாற்பது கோடி) பவுண்டு இறைச்சி வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்த வியாபாரத்தில் நியூசிலாந்திற்கு அடுத்தபடியாக, ஆத்திரேலியா (2000 இலட்சம் பவுண்டுகள்), அர்செண்டைன (1110 இலட்சம் பவுண்டுகள்), உருகுவே (170 இலட்சம் பவுண்டுகள்) ஆகிய நாடுகள் ஏற்றுமதி செய்கின்றன. அதிக அளவு இறக்குமதி செய்யும் நாடுகள், இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகியவைகளாகும். இங்கிலாந்து மட்டும் ஆண்டுக்கு 800,000,000, (எண்பது கோடி) பவுண்டு இறைச்சி இறக்குமதி செய்கிறது.

கம்பளிக்காக ஏற்றுமதி செய்யப்படும்ஆட்டுரோமம் 2000000000 பவுண்டுகளாகும். ஆஸ்திரேலியா மட்டும் இதில் மூன்றில் ஒரு பங்கு கொடுக்கிறது.

பல்வேறு நாடுகளிலிருந்து பிற நாடுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்றுமதியாகும் ஆடுகளின் எண்ணிக்கையைப் பாருங்கள்.

அல்ஜீரியா	575000
யூகோசுலேவியா	592000
எய்ரி	365000
துருக்கி	860000
மொராக்கோ	162000
பல்கேரியா	15000
தெ. மே. ஆப்ரிக்கா	103000
மே. ஆப்ரிக்கா	194000
அர்ஜெண்டைன	655000

"இத்தனை நாடுகள், ஆடு, அதன் இறைச்சி, அதன் மயிராலான கம்பளம் முதலியவற்றை விற்பனை செய்கின்ற நேரத்தில், நாமும் ஏன் செய்யக்கூடாது? அதற்கான வசதிகள் இங்கு அதிகமுள்ளனவே!" எனக் கேட்டால், அதற்கு பதவியில் உள்ள மமதையாலோ, தான் இருக்கும் பொறுப்பை மறந்தோ, "கறிக்கடையா வைக்க?" எனக் கேட்கிருர்கள்.

இது இருக்கட்டும், இன்று உலக நாடுகள் அத்தனையையும் டாலரால் தாலாட்டும் அமெரிக்கா செய்கிற தொழில்களில் ஒன்று "எலி" வியாபாரம். நியூயார்க் அருகேயுள்ள நியூசிட்டி, எனுமிடத்தில் "கார் வொர்த் பாம்" என்றதோர் எலிப் பண்ணையிருக்கிறது. அங்கிருந்து ஆண்டுக்கு இருபது இலட்சம் சுண்டெலிகள் வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றன.

இதைக் கூறினுல்கூட நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் "எலிக்கடையா வைக்க?" எனக் கேட்பார்.

பற்ருக்குறை நிதியைத்தான் சரிசெயயலாம் - இந்த அமைச்சர்களின் பற்ருக்குறை மதியைஎன்ன செய்வது.

ஆகவேதான் கேட்கிறோம் - எது பற்ருக்குறை? நிதியா? மதியா?

-டி. யு. ஆர்.

ஆசிரியத் தோழருக்கு.

திருத்தம்.

★

அன்புடையீர்,

கடந்த 18-7-'59 "தென்றல்" இதழில், "ஐயம் அகற்று" பகுதியில், திரு. கூத்தகுடி சண்முகம் என்பாரைப் பற்றி, தாங்கள் கூறியுள்ள பதில் தவறெனத் தெரிய வருகிறது. நாச்சியாபுரம் கொள்ளை வழக்கில் இவருக்குச் சம்பந்தமில்லை என்று கூறப்படுகிறது. எப்படியிருப்பினும் உங்கள் நண்பர்கள் சிலர் கூறுவதை மட்டும் கொண்டு, முடிவுகட்ட வேண்டாம். நாச்சியாபுரம் வழக்கில் தோழர் சண்முகத்திற்கு, சம்பந்தமில்லை; திருத்திக்கொள்க.

அன்பன்,

27-9-'59 வெற்றியூர் } கே. தங்கையா.

[திருத்திக்கொள்க.—ஆ-ர்.]

தொண்டு.

★

அன்புடையீர்,

வணக்கம் "காரைக்குடிக் கவியரங்கம்" "தென்றல்" மூலம் தந்த இன்பம் பெரிது. அதன் சுவையில் ஈடுபட்டு மகிழ்ந்தேன். மதிவாணனின் "தமிழகத்தின் தளபதி", மலைச்சாமியின் "நிலவும் கடலும்" சிறப்புடையன. "தென்றல்" என்றும் சிறக்க விழைகிறேன்.

தங்கள் அன்புள்ள,
முரு. சேதுராமன்,
ஆவினிப்பட்டி.

"சிவகெங்கைச் சீமை"

சமீபத்தில் கெய்ரோவில் நடைபெறவிருக்கும் சர்வதேசப் பட விழாவிற்கு, இந்திய அரசாங்கம் கண்ணதாசன் புரடக்ஷன்சாரின் "சிவகெங்கைச் சீமை"யைத் தேர்ந்தெடுத்திருக்கிறது,

இந்திய அரசாங்கம் கோரியபடி "சிவகெங்கைச் சீமை"யின் புதிய பிரதி ஒன்று டெல்லிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சர்வதேச விழாக்களுக்குச் சாதாரணமாகத் தமிழ்ப்படங்கள் போவது குறைவு. இந்த விழாவிற்கு மற்றுமொரு படம் தேர்ந்தெடுக்கப்படலாமெனத் தெரியவருகிறது. அது எந்தப் படமென்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்தப் படங்களை டில்லியில் நீதிபதிகள் பார்த்து முடிவு செய்வார்கள்.

எங்கும் கிடைக்கும்!

எஸ். எஸ். தென்னரசு
எழுதிய
ஆடற்கலையரசி ஒருத்தியின் இனிய காதற் கதை.
(இராமனுதபுர மாவட்டத்தில் நிகழ்ந்தது.)
"தென்றல்" இதழில் வெளிவந்தது.
★
விலை ரூ. 1-50.
★
விற்பனையாளர்களுக்குக் கழிவு 25%.

காவியக் கழகம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

— 11-ம் பக்கத் தொடர்ச்சி —

பி. அசுவத்தாமன்,
புதுக்கோட்டை.

மேற்கத்திய நடிகர்களில் யாருடைய நடிப்பு உங்களுக்குப் பிடிக்கும்?

மார்லன் பிராண்டோ. அவன் எந்த உணர்ச்சியையும் ஆடாமல் அசையாமல் பார்வையில் காட்டுகிறான்.

★

பாலன், புதுக்கோட்டை.

இன்றையக் கவிஞர்களிடம் காணும் புகை பிடித்தல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்கள் எதுவும் பாரதியாரிடம் கிடையாது என்று சா. கணேசன் கூறினார். சரியா?

பாரதியாரைப் பற்றி அவரோடு நேரில் பழகிய வ. உ. சி. எழுதிய கட்டுரையில், கஞ்சாவும் அபினியும் அவர் கணக்கின்றிக் குடித்ததாகவும் தின்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். உண்மையை மறைத்து, பாரதியின் உடம்பை கணேசன்போன்ற பைத்தியக்காரர்கள் கழுவ முற்பட்டிருக்கிறார்கள். கழுவாமலேயே அவர் அழகாகத்தான் இருக்கிறார். இந்தப் பழக்கம் ஒன்றும் அவர் கவித்துவத்தைக் குறைத்துக் காட்டி விடவில்லை.

பழம் பாடல்களிலிருந்து ஒரு சில வரிகளை எடுத்து கவிதை புனைவதை, திருட்டு என்கிறாரே ம. பொ. சி. தங்கள் கருத்து யாது?

முன்னவர் சொன்ன மொழி, பொருள், சொற்களை பொன்னே போல் போற்றுவதற்கு நன்னூலில் ஒரு சூத்திரமிருக்கிறது. எந்நூலும் கல்லாதவருக்கு நன்னூல் எப்படிப் புரியும்? வள்ளுவன் குறளை அப்படி அப்படி எடுத்தாளாத காப்பியங்களில்லை. இந்த எடுத்தாளும் முறை முன்னவனுக்குப் பெருமை தருகிறது. நான்கு வரிகளை முன்னவனிடமிருந்து எடுத்து அவற்றின் தொடர்ச்சியாக இருபது வரிகளை சொந்தமாய் எழுதுவதற்குத் தனித் திறமை வேண்டும். எடுத்தாளும் வரிகளுக்குச் சமமாகச் சொந்த வரிகள் அமைந்தாலன்றி ஆட்சி சிறக்காது. சிறப்பாக ஆளத் தெரிந்தவனையே பழந்தமிழர்கள் போற்றியிருக்கிறார்கள்.

**"தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழு
தெழுவாள், பெய்யெனப்
பெய்யும் மழை"**

என்பது திருக்குறள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுவாளைத் தெய்வந்தொழுந் தகைமை திண்ணிதால்..." என்று இந்தக் குறளை ஆட்சிசெய்கிறார் இளங்கோவடிகள். அவரைத் திருடனென்பவன் அடிமடையனே...... அங்ஙனமே பிறவும்...!

★

ஆர். சுந்தரம், மதுரை.

அமெரிக்க அரசியல் முறை, ரஷ்ய அரசியல் முறை இரண்டில் எது உங்களுக்குப் பிடிக்கும்?

அமெரிக்க முறை தாறுமாறாக வளர்ந்து கெட்டுவிட்டது. ரஷ்ய முறை அடக்கிக் கெடுக்கப்பட்டது. இரண்டுக்கும் நடுவாய மூன்றாவது அரசியல் முறையே எனக்குத் தேவை......அதைப் போதிக்கும் ஒரு கட்சியிலேதான் நான் இருக்கிறேன்.

சுதந்திரா கட்சியைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் பயப்படுவதேன்?

கணக்கப்பிள்ளை விலகிப்போனால் அவன்மூலம் கள்ளக்கணக்கெழுதி வந்த முதலாளி பயப்படுவதில்லையா? காங்கிரசின் உள்ளும் புறமும் நன்றாக அறிந்தவரில்லையா ஆச்சாரியார். காங்கிரஸ்காரர்கள் ஏன் பயப்படமாட்டார்கள்?

நல்ல நடிகன் எப்படி இருக்க வேண்டும்?

ஏதாவது ஒரு படியில் இருக்க வேண்டும். எப்படியும் இருக்கலாமென்று இருந்துவிடக் கூடாது.

★

மு. நாராயணன், முல்லைக்காடு.

"பாரதிதான் புரட்சிக் கவிஞன்; பாரதிதாசன் ஒரு பிற்போக்குவாதி" என்று தோழர் ப. சீவானந்தம் அவர்கள் பேசினார்கள்....

நமது 'பொதுவுடைமைத்தோழர்களுக்கு இப்போது பல வகையான குழப்பங்கள். அவர்களுக்குத் தாய்நாடு ரஷ்யாவா, சீனாவா, இந்தியாவா என்பதையே அவர்கள் முடிவு செய்யவில்லை. பாரதியையும் - பாரதிதாசனையும் ஒப்பிட்டு முடிவு கட்ட வேண்டியவர்கள் தாய்நாட்டுப் பற்றும், இனப்பற்றும், மொழிப் பற்றும் உடையவர்களே தவிர, அந்நிய நாட்டின் ஊதிய அதிகாரிகளல்லர். இன்று பாரதி இருந்திருந்தால் புரட்சிப் பாதையில் பாரதிதாசனையே தன் தலைவனாகக் கொண்டிருப்பார். முதலாளித்துவத்தை எதிர்த்து உலக அரங்கில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளைமட்டுந்தான் பாரதி சொன்னான். நேரடியாக அதைச் சாடியவர் பாரதிதாசன் தான். புரட்சித் தத்துவத்தில் பாரதிதாசனுக்கு உரிய இடத்தை மறுப்பவர்கள் ஒன்று முட்டாள்களாக, அல்லது அயோக்கியர்களாக இருக்க வேண்டும். நான் அறிந்தவரையில் தோழர் சீவானந்தம் அவர்கள் முட்டாள் அல்ல. ★

ஈரிதழும் ஒட்டாத குறள்கள்!

19-9-'59 தென்றல் இதழ் "ஐயம் அகற்று" பகுதியில் கூழிபிறைத் தோழர் **வள்ளுவப்பித்தன்** *அவர்கள் எழுப்பிய "ஈரிதழும் ஒட்டாமல் கூறும்படியான ஐந்து குறட்பாக்கள் தருக" என்ற வினாவின் பதிலாக, சென்னை ச. க. கணேசன் முதலிய பல தோழர்கள் அக்குறட்பாக்களைக் குறிப்பிட்டு எழுதியிருந்தனர். அக்குறள்கள் ஐந்தும் கீழே தரப்படுகின்றன.*

**இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.**
(குறள்: 310)

**தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.**
(குறள்: 446)

**எய்தற்கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.**
(குறள்: 489)

**நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.**
(குறள்: (1082)

**தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் நெஞ்சு.**
(குறள்: 1296)

—7-ம் பக்கத் தொடர்ச்சி—

'ஒழுக்கு' என்பதைத் தவறாகப் பலர் கொண்டதாலே இவ்வளவும் எழுத வேண்டி வந்தது. மழையென்ற ஒன்றில்லையேல், உலகியலும் நடைபெறாது - அவ்வுலகியலுக்குத் தேவையான பொருள்களும் உண்டாகா.

நிலத்தின் அடியில் ஓடும் நீரின் ஓட்டத்தைத்தான் பரிமேலழகர், 'எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல்' என்றார். நிலத்தின் அடியில் எக்காலத்திலும் -எவ்விடத்திலும் நீரோட்டமுண்டு. நிலத்தின் அடியில் ஓடும் அந்நீரோட்டமில்லையேல், அங்கு உண்டாகும், திட திரவப் பொருள்களுமில்லை. அவையில்லையேல்-நாடும் நன்முறையில் நடைபெறாது. இவ்வுரையின் சிறப்பைத் தெளிந்தவர்கள் உணர்வர்.

'ஒழுக்கம்' என்ற பொருளில் 'ஒழுக்கை'க் கொள்வதைவிட, 'நீரின் ஓட்டம்' என்ற பொருளில் கொள்வது எத்துணைச் சிறப்பாக உள்ளது. **'உலகத்தின் பொருளாதாரமே இக்குறளால் கூறப்படுகிறது'** எனச் சுருக்கமாகக் கொள்ளலாம்.

"வான் சிறப்பிற்கு அடுத்த அதிகாரமாக, 'நீத்தார் பெருமை'யை வள்ளுவர் வைத்துள்ளார். அவர்களின் தலையாய கடன் ஒழுக்கம். அதற்குத் தோற்றுவாய் செய்யவே, அவ்வதிகாரத்து இறுதிக் குறளில் ஒழுக்கத்தைக் குறித்தார்" எனச் சிலர் கூறுகின்றனர். அங்ஙனமே ஒவ்வொரு அதிகாரத்திற்கும் வள்ளுவர் தோற்றுவாய் செய்கின்றாரா? என்று வினவுகின்றேன். அதனால், பிறர் கொண்ட உரையெல்லாம் சிறக்கவில்லை- ஆனால் பரிமேலழகர் கொண்ட உரைமட்டும் வள்ளுவர் கருத்தைப் புலப்படுத்துவதுபோல உள்ளது என்பதைத் தெளியலாம்.

—புலவர்
க. சி. இராசியண்ணன்.

மணமடல்

அன்புடையீர்,

வணக்கம். நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1990 புரட்டாசித் திங்கள் 18-ஆம் நாள் (4-10-'59) ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணி அளவில்,

செல்வன்:

ப. புகழேந்திக்கும்

செல்வி:

சுகுணாவுக்கும்

சென்னை, தியாகராயநகர், பிரகாசம் ரோடு, 5-ம் இல்லத்தில்

அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமண விழாவிற்குத் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

சென்னை-17
20-9-'59.

அன்பன்,
கண்ணதாசன்

கே. நாராண திருவிடச்
செலவன, வடகடாரம்.

பெரும் புலவர் திருமிகு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களைக் கொண்டு வினு விளக்கம் என்னும் பகுதியை நமது தென்றலில் தொடங்க வேண்டுமென்பது எனது வேண்டுகோள்...! நிறைவேற்றுவீர்களா...?

பாவாணரவர்கள் பொறுப்பான பல வேலைகளை மேற்கொண்டிருப்பவர்கள். தென்றல்பால் கொணடுள்ள பேரனபினுல், தென்றல் கேட்கும்போதெல்லாம் கட்டுரைகள் தந்து கொண்டிருக்கிருர். தொடர்ந்து அவர்கள் எழுத வேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை. வினுக்களுக்கு விளக்கம் அவர்களே தருவாகள் விரைவில்.

★

கே. பாலு, நெல்லை.

திருக்குறளுக்கு மிக எளிய முறையில் தனித் தமிழில் உரை எழுதியவர் யார் ?

பலரது உரைகளையும் படித்த பின்பு எனக்கு, பரிமேலழகர் உரையே தேவலைபோல் தோன்றுகிறது. இருப்பினும் அண்மைக் காலத்து விளக்க உரைகளில் டாக்டர் மு வ. அவர்களுடைய உரை சிறப்பாக உள்ளது.

★

மு. குலாப்ரஸூல், நெடுந்தீவு,
அந்தமான.

"Clove" என்னும் வார்த்தைக்கு ஓர் அகராதியில் 'இலவங்கம்' (கிராம்பு) என விளக்கம் இருக்கிறது. "லவங்" என வடமொழியாளர் கூறுகின்றனர். இலவங்கம்-கிராம்பு இவற்றில் துய தமிழ்ச் சொல் எது ?

வழக்கிலே லவங்கம் என்பதை ஒரு பட்டையாகவும், கிராம்பு - என்பதைத்தான் வெற்றிலையில் மடிக்கும் பொருளாகவும் காணுகிரேம்......வடமொழியாளரால் - 'லவங்' என்று கூறப்படுவது கிராம்பாக இருப்பதற்கில்லை. தமிழ் வணிகர்கள், கிராப்பு என்ற சொல்லையே பயன்படுத்திவந்திருக்கின்றனர். ஆனுல், இது தூய தமிழ்ச் சொல்தாஞ என்பது ஐயப்பாடே....

★

கண்ணதாசன் பதில் தருகிறார்

சி. ம. பாலதண்டாயுதம்,
மதுரை.

முக்குலத்தோர் என்னும் சொல் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவரைத்தான் குறிக்கும் என்று நான் கூறுகிறேன்...

கூறுங்கள். ஆனுல் அது உண்மையிலேயே கள்ளர்,மறவர், அகம்படியரைத்தான் குறிக்கிறது.

★

இரா. கன்னையன், மாயூரம்.

கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் விளங்கிய அசோகன் இமயத்தில் கொடி நாட்டிய தமிழ்வேந்தர்களை அறிந்திருந்ததாக திரு. மாறன் அவர்கள் வசனம் எழுதியிருப்பது சரியா ?

அசோகனுக்கு முன்பும் பின்புமே இமயத்தில் கொடி நாட்டுவதில் தமிழ்வேந்தர்களுக்கு அக்கறை இருந்திருக்கிறது.

★

அரி-மதி, திண்டிவனம்.

"'மதி' என்ற சொல் தமிழல்ல" என்று சிவஞானம் சொல்கிருரே- விளக்கம் தேவை...

அது தமிழல்ல என்று சொல்லியிருக்கமாட்டார். 'அது' தமதல்ல என்று சொல்லிருப்பார்.

உம்மை நான் நாத்திகன் என்ருல் ஒப்புவீரா ? விளக்கம் தேவை.

ஒப்பமாட்டேன். நல்ல நாத்திகன் குளிக்கக்கூடாது. வேட்டி கட்டக்கூடாது. நான் நாத்திகன் என்பதை மறுப்பதற்கு இவை காரணம். ஆத்திகனு என்ருல் அதுவுமல்ல. இரண்டு முட்டாள்களுக்கு நடுவே நிற்கின்ற தெளிவுள்ளவனுக இருக்கவே நான் ஆசைப்படுகிறேன். அந்தத் தெளிவே "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்."

★

பூ. பலராமன், வேலூர்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழில் நாகரிகம், கலை, கைத்தொழில்பற்றிய சொற்கள் மிகுந்துள்ளதாகவும், கடவுள், சமயம், வழிபாடு முதலியவற்றைக் குறிக்கும் சொற்கள் காணப்படவில்லை என்றும், ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எனின் பழந் தமிழர் கடவுட் கொள்கை எவ்விதம் இருந்திருக்கும் ?

கடவுளைப்போலவே அவரைப் பற்றிய கொள்கையும் குழப்பமாகவே காணப்படுகிறது. ஒவ்வொரு காலத்திய இலக்கியம் ஒவ்வொன்றை வழிபாட்டுக்குரியதாகக் குறிக்கிறது. மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் - சமயம் என்பதே இல்லை. வழிபாடு இருந்திருக்கிறது. அவ்வழிபாடும், நிலத்துக்குத் தக்கபடி, மனிதனின் பயத்துக்கு ஏற்றபடி இருந்திருக்கிறது. பகவன் என்று வள்ளுவன் குறிக்கும் சொல் ஆதி, அந்தம், உருவம் அற்ற ஒரே கடவுளைக் குறிக்கிறது. இதனை "பகவனே ஈசன், மாயோன், பங்கயன், சினனே, புத்தன்" என்ற வரிகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. இருப்பினும் வரையறுக்கப்பட்ட சமயமோ, அதனுள் அடைக்கப்பட்ட கடவுட் கூட்டமோ பழந்தமிழருக்கு இல்லை என்பது தெளிவு.

மா. இரா. சந்திரன,
தூத்துக்குடி.

"அவ்வூர்", "இவ்அறிஞர்" என்றெழுதலாமா ? இவ்வாறு ஒரு நூலுக்கு எழுதிய முகவுரையில் ஒரு பேரறிஞர் எழுதியிருக்கிருர். அவரைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

பேரறிஞர் புரிந்தாலும் பிழை பிழைதான். நானறிந்த வரையில் "அவ்வூர், இவ்வறிஞர்" என எழுதுவதே முறை.

★

மதிவாணன், திமோதர,
இலங்கை.

ஆண்களுக்குக் காது குத்துவது எந்தச் சங்க காலத்தில் தோன்றியது? தற்பொழுது அதைச் செய்ய வேண்டுமா? காது குத்தல், ருதுசாந்தி போன்றவைகளை விழாக்களாகக் கொண்டாடுவது சீர்திருத்தக் கொள்கைகளுக்கு ஏற்றதா ?

ஆண்களுக்குக் காது குத்துவது பிற்கால வழக்காகவே இருத்தல் வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் கி. பி. பனிரெண்டாம் நூற்ருண்டிற்குப் பிறகே ஆண்களுக்கு இவ்வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கருதுகிறேன். வரலாற்றுக் கதைகளுக்கான படங்களில் ஆண்களின் காதுகளில் வளையங்கள் தொங்குவதுபோல் போடுகிருர்கள்.இதற்கு எவ்வளவு ஆதாரம் உண்டென்பது எனக்குத் தெரியவில்லை. பிற மதத்தினர்களிடமிருந்து தங்களைப் பிரித்துக் காட்டுவதற்கு இந்து - சைவ சமயத்தினர் உண்டாக்கிய முறையாக இது இருக்கலாம். அண்மைக் காலத்திலேதான்,பரிசுகள் வருமென்பதற்காக இதை விழாவாகக் கொண்டாடுகிருர்கள். இது பொருளற்ற, தேவையற்ற விழா...! குடும்பப் பெண்களுக்கு ருதுசாந்தி செய்வதை விழாவாகச் செய்யும் பழக்கம் பழங்காலத்தில் இல்லை. பூப்புநீராட்டல் என்னும் பெயரில் கணிகையர் நடத்தும் விழாவாக இது இருந்திருக்கக் கூடும். 'பெண் ருதுவாகி இருக்கிருள்' என்று விளம்பரப்படுத்துவதற்கு இது பயன்பட்டிருக்கும். இப்போது நல்ல குல மக்களும் இவ்விழாவை நடத்துகின்ருர்கள். எனினும் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு இதுவும்உடன்பாடல்ல.

★

ஆலந்தூர் இராமச்சந்திரன்,
பி. எஸ்ஸி. சென்னை-1.

நாட்டுக்குத் தொண்டு செய்பவர் படிப்பிக்கும் ஆசிரியரா ? பத்திரிகை ஆசிரியரா ?

படிப்பிக்கும் ஆசிரியர் இல்லை என்ருல் பத்திரிகை ஆசிரியர் ஏது?

★

எஸ். பி. நாகராஜன்,
குகை-சேலம்.

மருதநாட்டு வீரனிலும், பாகப்பிரிவினையிலும் பாடல்கள் எழுதியுள்ளீரா ?

எழுதியிருக்கிறேன்.

★

அ. ச. பிள்ளை, கோவில்பட்டி.

அரசியல், இலக்கியம், கலை இந்த மூன்றிலும் எதன்மூலம் வெற்றி கிடைக்கிறது ?

அரசியல் வெற்றிக்குத் தந்திரம் காரணம்! இலக்கிய வெற்றிக்கு அறிவு காரணம்! காரணம் தெரியாமல் வெற்றி பெறுவது கலை ஒன்றுதான்.

★

கே. திருவாளத்தான்,
சென்னை-1.

போலீசார் தயாரித்த படத்திற்கு "உங்கள் நண்பன்" என்று தலைப்புக் கொடுத்திருக்கிருர்களே, "உங்கள்" என்பது யாரைக் குறிக்கிறது ?

சில நடிகர்களை...!

— 10-ம் பக்கம் —

ஆசிரியத் தோழருக்கு.

மாசு வேண்டாம்.

தென்னுதமிழ்ச் சொல்லாலே
உள்ளந் தன்னை,
செந்தமிழ்பால் ஈர்த்துவிட்ட
'தென்ற' லய்யா !
கொள்கையிலே மாறுபட்டக்
கருத்தைக் கொண்டோர்
கூற்றுக்கு மறுமொழியாய்
இழிந்த சொல்லால்
எள்ளுவதும் ஏளனமாய்க்
கவிதை பாடி
ஏசுவதும் நல்லதமிழ்ப்
பண்பே யாமோ ?
வெல்லரிய கவித்திறமை
யுடைய அன்ப !
வீசுகின்ற தென்றலிலே
மாசு வேண்டாம் !

- "தமிழடியான்",
வேலாயுதம்பாளையம்.

★

வாழ்க்கைக் குறிப்புக்கள்.

அன்புடையீர் !

அண்ணு அவர்களின் வாழ்க்கை வரலாறு, அப்பெரியாரின் அறிவின் திறன் ஆற்றல் முதலியன பற்றிச் சிறுவை ந.இனியன இரண்டு வார இதழ்களில் எழுதியகட்டுரையைப் படித்துப் பெரிதும் மகிழ்ந்தேன். நல்ல தமிழில் பல வாழ்க்கைக் குறிப்புக்கள அக்கட்டுரையில் திகழ்கின்றன. பெரியார்களைப் பற்றி இத்தகைய வாழ்க்கைக் குறிப்புக்கள் தங்கள் இதழில் வெளிவரின் அது தமிழர்க்கும் ஏனையோர்க்கும் பெரும் பயன் அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
கு. மதுரை.

நினைவலைகள்!

அலை அலையாய்க் கிளம்புகின்ற நினைவுகள் மிக மிகக் கொடியன. ஆசைகளும் அவ்வழியே!

கொத்துக் கொத்தாய்ப் பூக்கின்ற மல்லிகையை நுகரலாம்.

குலை குலையாய்த் தொங்குகின்ற காஞ்சிரங் காயை நாடுவார் யார்?

ஆசைகளும் அவ்வழியே!

நிகழ்ந்துதான் ஆக வேண்டியன; நிகழத் தவறுதன; அவை நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன.

மனம் நன்கறியும்; வாழையடி வாழையாய்ப் பலர் இச்செய்தியைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றனர் என்பதை அறிவு உணர்ந்துதானிருக்கிறது.

என்றாலும் இவற்றைச் சுமக்கத் தயங்குகிறது எண்ணம.

கொலை வாளெடுக்குங் கொடுங் கூத்துகள் வரலாற்று அதிகாரங்களின் முடிவுகளாகத்தான் இருக்கின்றன.

இவற்றைப் படித்து ஒப்பித்துத் தேறவும் செய்திருக்கிறோம்.

மனிதனின் வாழ்வு உலக ஏட்டில் ஓர் அதிகாரம் என்றால், இறுதியில் அது துவைத்து நசுக்கப்படுவதை அறிவோம்.

நாமே பலரிடம் அதனை எடுத்தோதியிருக்கிறோம்.

என்றாலும், நெஞ்சம் அதிரத்தான் செய்கிறது. விழி மூடிக்கொள்ளத்தான் துடிக்கிறது.

அரசியல் விளையாட்டில், ஒருவன் கொலையுண்ட இடத்தில்தான், மற்றவனது வெற்றி தொடங்கச் செய்கிறது. பரம்பரை பரம்பரையாக வந்து போகும் இந்தக் காட்சியை நாம் நன்கு கண்டிருக்கிறோம்.

நெப்போலியனின் வீழ்ச்சி, கிராம்வெல்லின் மறைவு, சாரின் சாவு முதலிய அனைத்தையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆனாலும் அப்போதெல்லாம் கலங்காத விழிகள்...அந்தச் சாவுக்கெல்லாம் கண்ணீர் வடிக்காத நெஞ்சங்கள், வருந்துகின்றன.

வேறு நாளாய் இருந்தால் இக்கொலைகளைக் கண்டு அஞ்சப் போவதில்லை நாம். கொலையுண்டோருக்காகக் கண்ணீர் வடிப்பதும் அரிதாகிவிடும். ஆனால்... இந்நாளில் குடியாட்சியின் பெருமையை வானளாவப் புகழ்கின்றோம். மக்களாட்சி பண்பு தழைக்க வேண்டும் என்று முழக்குகிறோம்.

பதவி வெறிக்காக உயிர்களைப் பலிவாங்குவது நிறுத்தப்பட்டாக வேண்டுமென்கிறோம்.

நேர்மை வளர வேண்டுமென்று நாம் எண்ணும் இந்த நாளில்...இத்துணை கொலைகளா?

ஆசிய மண்ணுக்குப் பிடித்த பெருங்கேடாய், ஒன்றன்பின் ஒன்றாய்க் கேடுகள் வளர்கின்றன.

எந்த பிர்லா கள்ளக் கணக்கெழுதி அரசினரை ஏமாற்றினாரோ, அந்த பிர்லாவின் மாளிகையில் தங்கியிருந்தார். கொடியவர்களையும் நல்லோராய் மதித்த காந்தியார், அந்த இடத்தில்தான் கொலை செய்யப்பட்டார். கும்பிட்டவன் கொலைகாரனானன். இந்தியத் துணைக்கண்டத்தின் முதல் பலியானார், **காந்தியார்.**

பாகித்தானை நிறுவிய இருவருள் ஒருவர், லியாகத் அலிகான். இனத்தின் வளத்துக்காகத் தன் வாழ்வையே படைத்த அவர், பொதுக் கூட்டத்திலே சுட்டுக் கொல்லப்பட்டார். கொலைகாரனின் மூலமே தெரியவில்லை. பாகித்தானின் முதல் பலியானவர் **லியாகத் அலிகான்.**

பாராளும் மன்றத்திலே கூடிப் பாங்கான வழிகளிலே திட்டம் தீட்ட முனைந்த நேரத்தில் பலியானான் **அவுங் சான்.** அவன் பர்மாவின் முதல் பலி.

அந்த வரிசையிலே மற்றொரு கொடுமை...

ஏழு வயது பையன் ஒருவன் கூறினான் "என்றாகிலும் ஒரு நாள் நான் இந்நாட்டின் முதலமைச்சனாவேன்" என்று.

சொன்ன சொல்லைக் காப்பாற்ற அல்லும் பகலும் உழைத்தான். வெற்றி முழங்கப் பெருவாழ்வு பெற்றான். தான் பிறந்த நாட்டின் தலைமையமைச்சனானன். ஆனாலும்...

★



தோற்றம்
8-1-1899

மறைவு
26-9-'59

★

ஏறக்குறைய எண்பத்தைந்து லட்சம் மக்களே வாழும் சின்ன நாடுதான் அவன் நாடு. என்றாலும் அதை அழகு கொழிக்கும் பூங்காவாக்கினான். ஏறத்தாழ நாற்பது கோடி மக்கள் வாழும் இந்தியத் துணைக்கண்டத்தின் நேருவும் அஞ்சினார் அவன் ஆட்சியைக்கண்டு.

மூன்றே முக்கால் கோடித் தமிழரைக் கட்டியாளும் காமராசர் செயல்பட மயங்கிய செயலைத் துணிவுடன் செய்தான். நல்ல முடிவைக் கண்டான். இங்குள்ள காமராசர், மோட்டார்ப் போக்குவரத்தை மாநிலம் முழுக்கத் தேசிய மயமாக்க அஞ்சுகிறார். முன்பு கன்னியாகுமரியில் கேரள ஆட்சியின் கீழ் ஓடிய "பஸ் ரூட்"களை மட்டும் தேசிய மயமென்று சொல்லிக்கொண்டார். சென்னை நகரிலும் தேசிய மயமாக்கப்பட்டிருக்கின்றன உள்ளூர் வண்டிகள். ஆனால் மாநிலமெங்கும் தேசிய மயமாக்க அஞ்சுகிறார் காமராசர். இவர் மூன்றே முக்கால் கோடி மக்களின் தலைவராம். சின்னஞ்சிறு நாட்டின் தலைவனான அவன் மெத்தப் பெரிய பொறுப்பை ஏற்றான்; மோட்டார்ப் போக்குவரத்தையும், உடன் துறைமுகத்தையும் தேசிய மயமாக்கினான். நாட்டார் தரும் வாடகைக் காசு, நாட்டார் எல்லோருக்குமே பயன் படட்டும் என்றான்; தேசிய மயமாக்கினான். தனிப்பட்ட முதலைகள் கொள்ளையடிப்பதைத் தடுத்தான்...அவன் தன் வாழ்வில் காமராசர்களுக்குக் கற்றுத்தந்த பாடம், இது.

"சின்னஞ்சிறு நாட்டால் என்ன செய்யமுடியும்? என்ன மதிப்பிருக்கும்?" என்று எல்லாம் தெரிந்த நேரு பெருமான் கேட்கிறார். திராவிடத்தைச் சின்னஞ்சிறு நாடென்கிற நேருவை, இலங்கையின் தலைமையமைச்சனான அவன் ஆட்டிவைத்தான். பிரித்தானியப் பொது நலக் கூட்டுறவில் நேருவுக்கு எந்த இடமோ அந்த இடத்தை அவனும் பெற்றான். ஐ. நா. வில் நேருவின் குரலையும் அழுத்திவிட்டுத் தன் குரலையுயர்த்தினான். என்ன செய்வது? திக்கெங்கும் புகழ்பெற்ற தீரர் நேரு அவனைக் கண்டால் வாயடைக்கத்தான் செய்தார். அவன் நாடு முழுமுவம் விளையும் அளவுத் தேயிலையை நம்நீலமலைக் குன்றுகள் தருகின்றன. அவன் நாட்டைவிட அதிகப்படியான காபியைத் திராவிடம் தருகிறது. இன்னும் அங்கில்லாத தங்கம், நிலக்கரி, ஆபிரகம் முதலியன தென்னகத்தில் இருக்கின்றன. இவை போக, அகிலும் தேக்கும் அழகாய்ச் சந்தனமும் தரும் குன்றுகள் ஒருபுறம், முத்தும் மீனும் குவியும் கடல்கள் மறுபுறம்; இவற்றிற்கு மேலாக எதையும் செய்துமுடிக்கும் ஆற்றல் மறவர்களின் அணிகள் நாடெங்கும். "இத்தனை இருந்தும் வாழமுடியாது!" என்று கேலி பேசுவோர்க்குத் தக்க பாடத்தைக் கற்றுத் தந்தான் அவன். ஆமாம இத்துணை பெருமைகளுக்கும் உரியவன்தான், **சாலமன் வெஸ்ட் ரிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயகா.** 1914-ல் ஆக்ஸ்போர்டில் படிக்கும்போதே தலைசிறந்த பேச்சாளன் எனப்பெயர் பெற்றான் இவன். வாளைப்போல் சுழன்று தாக்கும் இவன் பேச்சு வன்மையை வியந்த பலர், இவனது நீளமான பெயரின் முதல் எழுத்துக்களான S, W, R, D, முதலியவற்றோடு 'O"வைச் சேர்த்து, "ஸ்வோர்ட்" எனும் செல்லப்பெயரைச் சூட்டினர். அத்தகைய பேச்சு வன்மையிருந்ததால்தான் மேடை வாயாடிகளின் தலைவரான நேருவையும் ஆட்டிவைத்தான். அவன் இன்று மாண்டுவிட்டானும்....இல்லை...இல்லை...பதவி வெறிக் காசைப்பட்டு அலைந்த ஒருவன் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டானும்...என்ன சொல்லி வருந்துவது?

இந்தக் கொடுங்கொலை, அவன் தமிழர்கட்கு இழைத்த ஆயிரம் ஆயிரம் தீங்குகளைக்கூட ஒரு கணம மறக்கச் செய்கிறது...தமிழர்கட்கு அவன் இழைத்த கொடுமைகளைச் சற்றே மன்னித்துக் கண்ணீர் வடிக்கச் செய்கிறது.

அவன் எந்தக் கூட்டத்தின் வெறிச் செயல்களுக்குக் கருவியாக இயங்கினானோ, அந்தக் கூட்டமே அவனைக் கொன்றுவிட்டது...

மக்களாட்சிப் பண்பு சிதைக்கப்பட்டுவிட்டது இலங்கையிலும் என்ற சேதி கேட்டு நாமும் வருந்துகிறோம்...

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6 தமிழ்நாடு